

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-10,11.

நளி, சிலை தி. பி. ௧௯௯௯ (1968-டிசம்பர் 1969 சனவரி)

பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

திருக்குறளும் தமிழினமும்.

திருக்குறளைப்பற்றித் தமிழன் தெரிந்து கொள்ள விரும்பாத காலம் ஒன்றிருந்தது. திருக்குறளைப் படித்துத் தெரியாத தமிழர் இருந்தனர். திருக்குறள் என்றால் திருக்கோயிலூரா என்று கேட்கும் பேதை மாந்தர் இன்றும் இல்லாமல் இல்லை. 'தீக்குறளை சென்றோதோம்"—என்ற பாவையடிக்குத் "திருக்குறளை ஓதமாட்டோம்"—என்று பொருள் கூறினரும் இக்காலத்தவர் தாம். திருக்குறளினும் சிறந்து விளங்குவது பரிமேலழகர் உரையே என்று கரவுரை கூறுவாரும் தமிழினத்தாருடன் அறக்கலந்தே உள்ளனர். வடமொழி நூல்களின் பிழிவே திருக்குறள் என்று பெருமைபேசும் ஆரியப் பித்தர்களையும் நாம் பார்க்கத்தான் செய்கின்றோம். திருக்குறளிலும் அடிமைக் கருத்துகள் உளவாகையால் அதனையும் விலக்கியே ஆகவேண்டும் என்று பேசப்பெறும் கருத்தும் சீர்திருத்தம் என்று மதிக்கப் பெறுகின்றது. ஓரினத்துத் தோன்றிய

ஓர் உயர்ந்த அறநூலைப்பற்றி அவ்வினத்து மாந்தரே இவ்வாறு பெருமைக் குறைவாகப் பேசுகின்ற தீயூழ் இத் தமிழினத்தல்லாது பிறிதோர் இனத்துள் காண்பது மிகமிக அரிது.

திருக்குறளின் அறத்துப்பாலையும் மநுவின் 'தர்ம சாத்திரத்தையும்' ஒருமுறை ஒப்பிட்டுப் பார்த்தாலே திருக்குறளின் மாட்சியும் மநுவின் சூழ்ச்சியும் தெற்றெனப் புலப்படும். 'வருண' அடிப்படையை வல்லெனப் புகுத்தும் மநுவின் 'தர்ம' மெங்கே? பிறப்பின்வேறுபாட்டைக்கடிந்துவிலக்கும் திருக்குறள்அறம் எங்கே? ஆரியப் பார்ப்பனரின் ஏற்றத்திற்கென்றே உருவாக்கப்பெற்ற மநு எங்கே? தமிழினத்துப் பிறந்தும் தம்மினத்தார்க்கென்று தனித்த ஓர் சொல்தானும் கூறாமல், உலக மாந்தர் அனைவர்க்கும் பொதுவாக அறங்கூறும் திருவள்ளுவப் பெருந்தகை எங்கே? உயிர்க்குல வளர்ச்சிக்கும் துயர மீட்சிக்கும் அடிப்படைத் தொழிலாகிய உழவுத் தொழிலைக் கீழான தொழில் என்றும், இழிந்தோர் செய்வதென்றும், ஆரியர் இத்தொழிலை தீராத வறுமை வந்தவிடத்தும் செய்தல் கூடாது என்றும் 'தர்மம்' கூறும் மநுவின் கீழ்க்கடை அறிவெங்கே? 'உழுவார் உலகத்தார்க் காணி' என்றும் 'உழவே தலை' என்றும் வகுத்துரைக்கும் அறச்செல்வர் திருவள்ளுவரின் உலகியலறிவெங்கே?

இனி, பொருட்பால், கௌடில்யரின் 'அர்த்த' சாத்திரத்தைத் தழுவியதென்பார்தம் கூற்றும் கடல்நீரில் வெண்ணெய் திரட்டியதாகக் கதையளக்கும் புல்லியர்தம் கூற்றே ஆம். அரசியலைக் கைப்பற்றச் சூழ்ச்சியொன்றே கைவாள் என்று பாரித்துரைக்கும், கௌடில்யனையும், அறமொன்றே அரசியல் என்று வலிந்துரைக்கும் திருவள்ளுவரையும் ஒரு துலையின் இருதட்டுகளில் வைத்தளப்பார்தம் கீழ்மையை என்னென்பது? அரசன் வலுவற்றிருக்கும் பொழுதே அவனை வெல்லுதற்கு எளிதான காலம்என்று கோழைமறங்கூறும் சாணக்கிய (கௌடில்ய)னின் குறுக்குவழி, 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தலினிது' என்று நேருக்குநேர் நின்று போர்புரியும் மறம் புகட்டும் திருவள்ளுவரின் நேரிய போராண்மைக்கு முன் நிற்குமோ?

இனி, வாத்சாயனாரின் காமநூல் உரைக்கும் இழிந்த ஒழுகலாறுகளினின்று, திருவள்ளுவர் இன்பத்துப்பாலைப் பிழிந்தார் என்று கட்டியுரைக்கும் முட்டறிவு வாய்ந்த முழுமக்களின் வாய்ப்பந்தரை எவ்வாறு ஒப்புக்கொள்வது? உடலுணர்வுகளால் பெண்டிரை வயப்படுத்தும் வாத்சாயனாரின் கழிகாமப் புரட்டுகளும், உள்ளவுணர்வுகளால் இல்லறத்தை மீமிசை மாந்தர்தம் வாழ்வியல் முறைகளாக வகுத்தளிக்கும் காதன் மேம்பாடுகளும் ஒன்றுமோ? விலைமகளிர் கூடங்களில் கற்பிக்கப் பெறும் பாட

நூலாக விளங்கும் வாத்சாயனரின் காம 'சூத்திரம்', திருவள்ளுவர் காட்டும் இல்லறவியலுக்குப் பொருந்துவதாமோ? அறிவோரே! கூறுமின்,

எனவே ஆரியப் பார்ப்பனர்தம் கட்டறுத்த கற்பனைநூல்களைவிட உலக மாந்தர் எல்லார்க்கும் சாலப் பொருந்துவதும், உலகியற் பூசல்களினின்று அவரை மீட்டுக் கொடுக்கும், தகுதி வாய்ந்ததும், உலக அறநூலறிஞர்கள் யாவரினும் மேலாக அறம் பயிற்றிய நடுநிலையாளரான திருவள்ளுவரை ஆசிரியராகக் கொண்டதுமான திருக்குறளைத் தமிழ்மக்கள் அனைவரும் தங்கள் தலைநூலாகக் கொள்ள வேண்டுவது விலக்கலாகாத கடமையாகும்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருக்குறள் தோன்றி இற்றைக்கு ஈராயிரமாண்டுகள் முடிவுறுகின்றன. எனினும் திருக்குறளின் பெருமை இன்னும் உலகுக்குச் சரிவர உணர்த்தப் பெறவில்லை. இதற்குத் தலையாய கரணியம் என்ன? திருக்குறள் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆயினும் தமிழன் அதனைத் தானே உணர்ந்தானல்லன். திருக்குறளை வாழ்வியல் நூலாக இன்னும் அவன் கொண்டுவிடவில்லை, இவன் இதனைச் சரிவர உணரத் தலைப்படுவானானால் இவன் தன்னைச் சமயத்தால் ஓர் 'இந்து' என்றும் 'கிறித்துவன்' என்றும் 'முசுலீம்' என்றும், 'பௌத்தன்' என்றும், 'சமணன்' என்றும் கூற ஒருப்படுவானோ? திருக்குறள் கூறும் இறைமாட்சியை இவன் உணர்வானானால் இவன் பிற சமயங்களை ஏறெடுத்துப் பார்ப்பானோ? திருக்குறள் கூறும் அறநெறிகளைக் கற்றுணர்ந்தால் இவன் வாழ்வியல் மடமைகள் விலகியிருக்காவோ? பொய்ம்மை கழலாதோ? மனப்பூட்டு திறவாதோ? மக்கள் யாவரையும் ஓரினமாகவும், ஒரே நிரையாகவும் கொள்ளானோ?

திருக்குறளைக் கல்லாத பெரியோரும், தலைவரும், அரசியல்காரரும் எவருளர்? எனினும் அவர் எல்லாரும் குலப்பற்றுக் கொள்ளாதவர் என்று சொல்ல முடியுமோ? சமயவெறி ஏறுதவர் என்று உரைக்கத் தகுவரோ? 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் பொன்னுரையைச் செயல்படுத்தத் தக்கவராக அவர் நடந்து கொள்வரோ? ஒருவனை வஞ்சித்தொழுகும் மதியிலராக நடப்பரோ? பொய்கூறிப் பிழைத்தொழுகும் பேதையுள் பேதையராகத் திரிதருவரோ? கிறித்துவமும், இசுலாமும், பௌத்தமும், சமணமும் சாற்றும் அறவுரைகளை எல்லாம் அவ்வச்சமயத்தார் கடைப்பிடித்தொழுக, தமிழர் மட்டும் ஏன் தம் சமய நூல் எனத்தகும் திருக்குறளின் நெறிப்படாதவராகத் தட்டுக்கெட்டுத் தடுமாறித் திரிதரல் வேண்டும்? ஏனெனில் இவரெல்லாரும் திருக்குறளை ஓர் இலக்கியமாகப் பயின்றவரே அன்றி-

திருக்குறள் ஓர் இலக்கிய நூல் என்றவளவில் ஒப்புக்கொண்டவரே யன்றி—அஃதோர் அறநூல், வாழ்வியல்நூல், மாந்தவினத்திற்கே ஒளிநல்கும் மறைநூல் என்றெண்ணிப் ஓதியவரும் அல்லர்; ஓர்ந்து உணர்ந்தவருமல்லர். திருக்குறளைப் பயின்று 'புராணிகரின்' பழங் கதை நிகழ்ச்சிகளைப்போல் பற்பல கூட்டங்களிலும், மேடைகளிலும் நகைச்சுவையாகவும், சொற்சுவையாகவும் பாடிப் பணம்பறித்து வருவோர் தம் வாழ்க்கையில் திருக்குறள் கூறும் மெய்வாழ்க்கையினையும், பற்றற்ற அறநெறிமுறைகளையும் கைக்கொண்டு ஒழுகினாரிலர். அரசியலாரும் திருக்குறளுக்குப் போதிய மதிப்பளித்தாரிலர். கல்வித்துறையில் கற்பிக்கவேண்டிய பாடங்களுள் ஒன்றாகவே இதனைப் பயிற்றுகின்றனரேயன்றி, சமயத்துறையில் பைபிளுக்கும், குர்-ஆனுக்கும், பகவத்கீதைக்கும் அளிக்கப்பெறும் புனிதத்தை இதற்கு ஏன் கற்பிக்கவில்லை? படித்துப் பாடஞ்செய்யும் ஒரு மனப்பழக்கத்திற்குரிய—தேர்வுக்குரிய நூலாக இதனைச் செய்த கல்வித்துறை அறிஞர், வாழ்வியலுக்குரிய, மனவளத்திற்குரிய ஒரு நூலாக இதனைக் கொள்ளாததே இதன் பெருமையைக் குறைத்து மதிப்பிடற்குக் கரணியமாக அமைந்தது என்றால் தவறாகாது.

பட்டக் கல்வியில் அரசியல், (POLITICS) பொருளியல் (ECONOMICS) பயிலும் மேனிலை வகுப்புகளில் அரிசுடாடிலின், பிளேட்டோவின், கௌடில்யரின் கருத்துகள் கலந்து பயிற்றப் பெறுவனபோல் திருக்குறளின் அறமும் பொருளும் ஏன் பயிற்றப்படக் கூடாது? திருக்குறளில் கூறப்பெறும் கருத்துகள் அரசியல் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடாதனவோ? அதன் பொருவியல் பொருள்படாத கருத்துகள் சான்றனவோ? சமய வகுப்புகளில் திருக்குறள் அறமுறைகளை ஏன் பயிற்றுவித்தல் கூடாது?

இங்ஙன், கல்வித்துறையிலும், வாழ்க்கைத் துறையிலும், அறநெறித் துறையிலும் திருக்குறளுக்குப் போதிய மதிப்பளிக்கப் பெறவில்லை. உலக முழுமைக்கும் பொதுவான அறம் பயிற்றும் நூலான திருக்குறளை ஏன் இலக்கியம் போல மொழிப் பாடங்களில் மட்டும் பயிற்றுவிக்க வேண்டும்? அரசியல், பொருளியல், சமயவியல், அறவியல், மக்களியல் முதலிய அனைத்துத் துறைகளிலும் திருக்குறளைப் பயிற்றுவித்து அதன் பெருமையினையும் சிறப்பினையும் உலகறியச் செய்தல் இன்றியமையாதது. திருக்குறளை இருட்டடிப்புச் செய்த காலமும் ஒன்றுண்டு. ஆரியர் சூழ்ச்சிக்கும், எரிப்புக்கும் தப்பி இன்றுவரை தமிழர்தம் பெருமைக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றங்கூறி வரும் பழம்பெரு நூல்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று திருக்குறள்; மற்றொன்று தொல்காப்பியம். தொல்காப்பியம் தமிழர்களின் வாழ்வி

யல் இலக்கணங்கூறும் ஒப்பற்ற நூல். திருக்குறள் அதற்கு இலக்கியமாக அமைந்த இணையற்ற நூல். இவ்விரண்டு நூல்களையும் போல் உலகில் வேறெந்த மொழியினும் இனத்தும் வேறுநூல்களைப் பார்க்க முடியாது என்பதை அறிஞர் உலகமே ஒருமுகமாகக்கூறும். இவ்வளவில் தமிழர்தம் ஏற்றத்தைப் பறைசாற்றும் இவ்விரண்டு நூல்களையும் ஆரியர் விட்டுவைத்தற்குக்காரணம் அவற்றையொட்டியெழுந்தபழங்கதைப் பூசல்களே! பரிமேலழகர் திருக்குறளுக்குஉரையெழுதியிருக்க வில்லையாயின் திருக்குறளை என்றோ அழித்து விட்டிருப்பர். அவர் உரை திருக்குறளின் உயர்ச்சிகூறி அவ்வுயர்ச்சிக்குக் காரணங்களாக, மநுவையும், கௌடில்யரையும், வாத்சாயனரையும் கூறி அதன்வழி ஆரியத்திற்குப் பெருமை கற்பித்ததாலன்றோ திருக்குறள் விட்டுவைக்கப் பெற்றது! அதுபோலவே தொல்காப்பியத்தை ஓர் ஆரியப் பார்ப்பனர் முந்து தமிழிலக்கண நூல்கள் முழுமையும் கண்டு முறைமையில் தெளிந்து, தம் ஆரியச்சார்பான கருத்துகளையும் அதனுட் புகுத்திப் புலந்தொகுத்ததாலன்றோ அதுவும் விட்டு வைக்கப் பெற்றுள்ளது!

எனவே தமிழர் திருக்குறளின் மூலப் பெருமையை முழுவதும் இவ்வீராயிரமாண்டுகட்குப் பின்னுவது நன்கு உணர்ந்து தெளிந்தது தமிழினத்தின் நல்லூழேயாகும். இற்றைத் தமிழக அரசு திருக்குறளுக்கு உரிய சிறப்பை அளிக்க முன்வந்ததும் மிகவும் பாராட்டுக்குரியதும் பெருமைக்குரியதுமாகும். எனினும் திருக்குறள் பெற வேண்டிய சிறப்பை இன்னும் பெற்றுவிடவில்லை. ‘இல்லாத ஊர்க்கு இலுப்பைப்பூ சருக்கரை’ என்பதுபோல், திருக்குறளே புறக்கணிக்கப்பட விருந்த நிலைக்கு, இக்கால் ஒருவகையில் அது கொண்டாடப் பெறுவது சிறந்ததே; ஆயினும் சிறந்ததோர் நூலையும் நூலாசிரியனையும் கொண்டாடும் வழியும் முறையும் இவ்வளவிலோடமைவன வல்ல.

திருக்குறள் தமிழர்களின் ஆரியக் கலப்பற்ற தனிப்பண்பாட்டு நூலென்பதும், ஆரியம் தமிழ்நிலத்து அடியூன்றிய காலைத் தமிழர்களைக் கட்டிக் காக்கவெழுந்த தூய விடுதலை நூலென்பதும், தமிழர் அறம் உலகளாவிப் பரந்தது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவதே திருக்குறள் என்பதும், வேறெந்த இனமும் தலைதூக்கித் தம்மையே பாராதவிடத்துத் திருக்குறள் ஒன்றே குன்றேறிப் புறம்பார்த்த நூலென்பதும், உலகின் பொதுச் சமய நூலாக, பொது அறநூலாக, பொதுவான வாழ்வியல் நூலாகத் திருக்குறள் ஒன்றே கொள்ளத் தக்கது என்பதும் மேனாட்டினர்க்கும் இவ்விந்திய நிலத் துண்டம் முழுமைக்கும் விளக்கப் பெறுதல் வேண்டும். திருக்குறள் உலக அரங்கில் வைக்கப் பெறவேண்டிய ஒரு தனி நூல். இதற்

கொப்பதும் மிக்கதுமான நூல் வேறெங்கும் எம்மொழியிலும் இல்லை. எனவே 'கல்வி' அளவில் திருக்குறள் கற்கப்பெறுவது மட்டுமன்றி, 'வாழ்க்கை' அளவில் இந்நூல் பயன்பெறுமாறு செய்வது அரசினரின் தலையாயகடமைகளுள் ஒன்றாகும். அதற்காயவழிகளிலெல்லாம் துணைநிற்பதும் தம்வழி அவற்றைக் கடைப்பிடித் தொழுகுவதும் மக்களுடைய கடமைகள் ஆகும். வளர்க வள்ளுவம்! பரவுக குறள்நெறி!

—பெருஞ்சித்திரன்.

'இந்தி'யா, 'இந்தியா'வா?

'குறடும் பேதையும் கொண்டது விடா'—என்பது பழமொழி. வடவர்க்கும் நடுவணரசுக்கும் இந்திபற்றி எத்துணையோ எடுத்துக்கூறியாயிற்று. இன்னமும் அவர்தம் குறட்டுப்பிடி தளரவில்லை. அரசியலில் விடாப்பிடி ஓரளவு தேவைதான். ஆனால் கருத்தைப்பொறுத்தே அப்பிடி கையாளப் பெறுதல் வேண்டும். இல்லையெனில் அப்பிடியே அவர்களுக்குச்சாப்பிடியாக அமைந்து விடுவதுண்டு. ஐம்பதுகோடி மக்கட்பெருக்கமுள்ள ஒருநாடு இந்தியா. என்றாலும் இவ்வைம்பதுகோடி மக்களும் ஒரேகொள்கையும், ஒரேவகை உடையும் நடையும், மொழியும், கருத்தும், பிரிவும் கொண்டவர்களாக இல்லை என்பதை நடுவணரசு உணராமலில்லை. ஆனால் எப்படியாவது இவர்கள் அத்தனைப் பேரையும் ஒரே மொத்த உருவமாக, ஒரே உணர்வுடையவராக ஒரே மொழி,நடை,போக்கு உடையவராகப் பண்ணிப்பார்த்து விட வேண்டுமென அவர்களுக்குக் கொள்ளை ஆவல். அதற்கொரு 'நொள்ளை' வழியையேனும் பின்பற்றிவிட வேண்டுமென்பதே அவர்கள் வேட்கை. அதற்கு அவர்கள் மந்திரக் கோலாகப் பயன்படுத்த விரும்புவதே இவ்விந்திமொழி. 'இந்தி' மொழி ஒன்றைக் கொண்டே இங்குள்ள எல்லாரையும் 'இந்தியர்' ஆக்கிவிட வேண்டுமென்று இந்திரா முதல் கோவிந்த தாசு வரை எல்லாரும் முக்கி முணகிக் கொண்டு முயற்சி செய்கின்றனர். இம் முயற்சி முடிவில் அவர்களின் உடலில் மடிந்து கிடக்கும் அரசியல் அழுக்குகளை வெயர்வையாக வெளியே கொண்டுவந்து தள்ளுவதோடு சரி. அதுவரைஅவர்கள் முறுக்கும் செருக்கும் நிற்கப் போவதில்லை என்பதைத் தமிழர் திட்டவட்டமாகப் புரிந்துகொண்டு விட்டனர்.

இவர்களின் இந்தி 'உடற்' பயிற்சிக்கிடையில் தமிழன் ஓர் உண்மையைத் தெளிவாகப்புரிந்து கொள்ளுதல் வேண்டும். தமிழன் தன் நாட்டைத் தனியே பிரித்துக் கொண்டாலன்றி, தவளையின் கால்களோடு கட்டுப்பட்ட எலியைப்போல் இழுப்பும் பறிப்புமாகவே தொல்லையும் துயரமும் பட்டுக் கொண்டுதான் இருத்தல் வேண்டும். இதனைத் தமிழனும் இங்குள்ள தமிழ்த் தலைவர்களும் இந்திரா அமைச்

சரவைக்குத் துணிந்து அறிவித்தாலன்றி 'இந்தி' பூச்சாண்டி காட்டிக்கொண்டுதான் இருக்கும்; தமிழனும் மிரண்டு கொண்டுதான் இருக்க வேண்டும். இந்தத் துணிவான அறிவிப்பையும் அதனையடுத்து அது நிறைவேற்றப்பட வேண்டிய வழிகளையும் கூறுவதை விட்டுவிட்டுத் தமிழன் என்றைக்கும் வடவனொடு அமைதியாகவே வாழ்ந்துவிட முடியாது. தென்னாட்டுத் தமிழனுக்கு எப்பொழுதும் ஒருண்மை வானத்துக் கதிரவன்போல் ஒளிவிட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். அஃதாவது தமிழனுக்கு எப்பொழுதும் பகை இரண்டு; ஆரியனும் வடவனும். இவ்விரண்டு பகைவர்களும் தமிழனை மூவாயிரமாண்டுகளாக முன்னேற விடாமல் தடுத்துக் கொண்டுள்ளனர் என்பதை அவன் என்றும் மறந்து போகக் கூடாது. மறந்துபோவானாயின் இவன் தன் தனிச் சிறப்பைப் விட்டுவிட வேண்டியதுதான்: ஒன்றால் இவன் ஆரியனாக மாறிவிடலாம்; அன்றால் இவன் வடவனாக வடிவெடுத்துக் கொள்ளலாம். இல்லை 'கூழுக்கும் வேட்கை, மீசைக்கும் ஆவல்' என்பதுபோல் தமிழனாகவும் இருக்க முடியாது; ஆரிய, வடவர்களுடனும் ஒன்றிப்போகவும் முடியாது. இது வரலாறு கண்ட உண்மை. அமெரிககனும் சீனனும ஒததுப் போனாலும் யூதனும் அரேபியனும் ஒத்துப்போனாலும், வடவியட்நாமியனும் தென வியட்நாமியனும் ஒத்துப் போனாலும் வடவாரியனும் தென தமிழனும் ஒத்துப் போக வாய்ப்பில்லை. ஒருவேளை தமிழன் தன் தாளாண்மைத் தனத்தாலும் வேளாண்மை மடத்தாலும் ஒருவாறு தனனை இழக்க ஒப்புக் கொண்டாலும் வடவாரியன தனனை இழக்க ஒருப்பட மாட்டான். இஃது உறுதி; உறுதி.

எனவே, தமிழனுக்கு அரசியல், குமுகாயவியல், பொருளியல், வாழ்வியல, மொழியியல—முதலிய அத்தனைத் துறைகளிலும் தன்னறிவும் தன்னுரிமையும வேண்டுமானால் முற்றமுடிந்த முடிபாக இவன் வடவனிடமிருந்தும் ஆரியப் பார்ப்பனரிடமிருந்து விடுதலை பெற்றே ஆகல் வேண்டும். அறம், அருள், நடுவுநிலைமை என்பதை யெல்லாம் புரிந்துகொள்ள வியலாத காட்டுமிராண்டிகளிடம் பேசிப் பயனில்லை. அவ்வாறு பேசிப் பேசியே தமிழன் இதுவரை தன் வலிவையும் இழந்தான்; பொலிவையும் இழந்து விட்டான். இருக்கின்ற தமிழரும, தமிழும், தமிழ்ப் பண்பாடும இனியாகிலும் காக்கப்பட வேண்டுமானால் தமிழன் பெறவேணடியது இந்திய அரசியலினின்று தன்னைத் துண்டித்துக் கொள்வதே! ஒன்றி-வாழ வியலாத பொழுது பிரிந்து வாழ்வதே அறம!

> ஒட்டார் பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
> கெட்டான் எனப்படுதல் நன்று.
>
> மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
> பீடழிய வந்த விடத்து.

-பெருஞ்சித்திரன்.

மொழிப்பெரும் புலவர்

பாவாணரின்

மூன்று அறிக்கைகள்!

தமிழ்நாட்டைத் தனிநாடாக்க இந்தியாரின் தூண்டுதல்.

(தில்லி 'மெயில்' தாள் சிறப்பறிக்கையாளரிடமிருந்து வந்த செய்தி (சனு, 1 -மொழிபெயர்ப்பு.)

க. தலைமை மந்திரியுயர் மொழிச் செய்தி பற்றி மீண்டும் திரு. அண்ணாதுரையொடு கலந்து பேசலாம்.

"திருவாட்டியார் இந்திராகாந்தியார் இங்கு இன்று காலை ஓர் அறிக்கையாளர் கூட்டத்தில், மும்மொழித் திட்டம்பற்றிச் சென்னை-நடுவண் இடைப்பட்ட அருவழக்கின் தீர்ப்பு தமிழ் நாட்டைப் பொறுத்த அளவே எங்களையும் பொறுத்துள்ளது என்று சொன்னார்.

"அவர் யாரையும் நெருக்கிடைப்படுத்த விரும்பவில்லை. ஆயின் இந்தியா முழுமைக்கும் ஒரு தேசிய இணைப்பு மொழி இருக்க வேண்டு மென்று அவர் உணர்கிறார். அவர் சென்னைக்குச் சென்றபொழுது அங்குள்ள படித்த மக்களொடு அவர் ஆங்கிலத்திற் பேச முடிந்தது. ஆனால், பொதுமக்களோடு பேசும்பொழுது ஒரு மொழிபெயர்ப்பாளா வேண்டியிருந்தது. அது ஒரு வருந்தத்தக்க நிலைமை.

"மற்றச் செய்திகளிற் போன்றே தீர்க்க முடியாத எந்தச் சிக்கலும் அல்லது புதிரும் இல்லையென்பது அவர் நம்பிக்கை.

'மும்மொழித் திட்டத்திற்கு என்ன நேர்ந்தது என்று வினவப் பட்டபோது, சிரிப்பிற்கிடையே, "அது இருக்கத்தான் செய்கிறது" என்றார்.

"மொழிச்சிக்கல் ஒரு திருக்கான செய்தி என்றார் அவர். சென்னை முதலமைச்சர் திரு. அண்ணாதுரையொடு இது பற்றிச் சில சமையங்களில அவா பேசி இருக்கின்றார. மீண்டும் அவர் தில்லிக்கு வரும போது அவரொடு பேசலாமென நினைக்கிறா."

இவ்வறிக்கையில், திருவாட்டியார் இந்திரா காந்தியார் சென்னைப் பொதுமக்களின் மொழிநிலைபற்றி வருந்தியதாகக் கூறுங்

கூற்று, தமிழுக்குக் கூற்ருக (கூற்றுவனுக) இந்தியைப் புகுத்தத் திட்டமிட்டிருப்பதைத் தெளிவாகக் காட்டுதல் காண்க.

உ. அண்மையில் நிகழ்ந்த சென்னை இந்தி பரப்பற் கழகப் பட்டமளிப்பு விழாவில், பட்டம் பெற்ற ஒவ்வொருவரும் ஓர் உறுதிமொழியைப் படிக்குமாறு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவரும் படித்திருக்கின்றனர். அவ் வுறுதிமொழியின் ஒரு பகுதி வருமாறு:-

''இத்தேச ஒற்றுமைக்கு ஒரு தேசியமொழி வேண்டியுள்ளது. இதற்கு எல்லா மொழிகளுள்ளும் மிகப் பொருத்தமானது இந்தியே. இதை நான் ஒப்புக்கொள்கின்றேன்...''

தன்னைக் கொல்ல வந்தவனையும் பாதுகாக்கும் வேளாண்மை மடம் இவ்வுலகத்தில் தமிழனிடம்தான் உண்டு. வேறெந்த நாட்டிலும் இத்தகைய கேடுசெய்யும் அமைப்பகத்தை அல்லது நிலையத்தை ஒரு நிமையமும் வைத்திரார். வருமுன் காப்போன், வருங்கால் காப்போன், வந்தபின் காப்போன் என்னும் மூவகைக் காப்போருள் கடைப்பட்டவனுகவும் தமிழன் இல்லையெனின், அவன் மக்கள் தொகைமிகையும் உணவுத்தட்டும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் உயிர் வாழ்ந்து என்ன பயன்?

சென்னை இந்தி பரப்பற் கழகம் உடனே தன் கடையைக் கட்டுமாறு தமிழக அரசு கட்டளையிட வேண்டும். சென்னை இந்தியெதிர்ப்பு மாணவர் இக்கழகத்தின்மேல் ஒரு கண் வைத்திருப்பதோடு, அக்கம் பக்கத்திலுள்ள தமிழர்க்கும் இதுசெய்யுங் கேட்டை எடுத்துச் சொல்ல வேண்டும்.

அக்கழகத்தில் இந்திப்பட்டம் பெற்றவர்க்குத் தமிழ்நாட்டு அரசியல் அலுவலகங்களில் எப்பணியும் தருதல் கூடாது.

அக்கழக வினைஞரொடு தமிழர் எவ்வகை உறவும் கொள்ளுதல் கூடாது.

—ஞா. தேவநேயன்.

நயன்மைக் கட்சியின் நாவலீடு (வினைக்கழைப்பு)

இருக்குமிடந் தெரியாமலிருக்கும் நயன்மைக் கட்சி (Justice Party), திடுமென்று நிகழும் சிலை (மார்கழி) மீ' கஎ—ஆம் பக்கல் (31—12—'68) சென்னைச் சிறுவர் அரங்கிற் கூடித் தன் பொன் விழாவைக் கொண்டாடியுள்ளது. அதோடு, தன்னை வலுப்படுத்து

மாறும் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதைச் செய்தித்தாள் வாயிலாகத்தான் அறிகின்றோம்.

இற்றைத் தமிழன் எந்த அளவிற்குப் பேதை என்பதை, நயன்மைக் கட்சியாட்சியும் அதன் கான்முளையாகச் சொல்லப்பெறும் தி. மு. க. ஆட்சியும் நன்றாய்த் தெரிவிக்கும்.

நயன்மைக்கட்சி கஎ (17) ஆண்டாகச் சென்னைக் கூட்டுநாடு முழுதும் கோநேரின்மை கொண்ட குடியாட்சி செலுத்தினும், இறுதியில் மீண்டும் எழுந்திருக்க வியலாவாறு படுகிடையாய் வீழ்ந்தது. அதற்குக் கரணகம் (காரணம்) இரண்டு. ஒன்று அதன் தலைவர் விடுதலையுணர்ச்சி சற்றுமின்றி ஆங்கிலராட்சியை முற்றுந் தழுவியது; இன்னொன்று அவர் நாட்டுமொழியை நாடாதது. அரசியற் கட்சிக்கு விடுதலையுணர்ச்சியே உயிர்நாடி யென்பதையும், மக்கள் முன்னேற்றத்திற்குத் தாய்மொழி வளர்ச்சி இன்றியமையாத தென்பதையும் அவர் அறியாது போயினர். அதனால் நாட்டுமொழி யறிவும் பொதுமக்கள் தொடர்பும் அவருக்கில்லாது போயின. நாட்டுமொழியை இகழ்ந்ததனால் புலவரையும் புறக்கணித்தனர்.

''இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு'' (௩௭௪)

என்பதற்கேற்பப் புலவர் பொருட் செல்வமில்லா வறியராதலால், நெடுகலும் செல்வரும் சிற்றரசருமாகவே யிருந்த நயன்மைக்கட்சித் தலைவர், மறைமலையடிகளைக்கூடப் பொருட்படுத்திப் போற்றவில்லை.

அற்றைச் சென்னைக் கூட்டுநாடு தென்னிந்தியத் திரவிடநாடு மூன்றனுள்ளும் ஒவ்வொரு பகுதியைத் தன்னுட் கொண்டதேனும், நயன்மைக் கட்சியைத் தெலுங்கராகிய வயவர் (P) தியாகராசச்செட்டியாரும் மலையாளியராகிய (T) மாதவ நாயரும் ஆகிய திரவிடரே தோற்றுவித்தாரேனும், அவர் ஆரியத்தை யெதிர்த்து மேற்கொள்ளத் துணிவும் ஆற்றலும் ஊட்டியவை, தமிழும் தமிழ் நாடுமே யென்பதை எவரும் மறுக்கவொண்ணாது. ஆயினும், இன்றும் தமிழ்நாட்டிற் கன்னடவழித் தமிழரான பெரியார் ஒருவரே ஆரியத்தை அரிமாமறத்தொடு எதிர்ப்பவர் என்பதையும் எவரும் மறைக்கவோ குறைக்கவோ முடியாது.

ஒரு நாட்டு மக்கள் நல்லறிவு பெறுதற்கும் ஓர் அரசியற்கட்சி நிலைத்துநிற்பதற்கும் விரிவான நாட்சரி ஒன்றும் பலவும் இன்றியமை

யாதவை என்பதை, இன்னும் தமிழ்நாட்டுத் தலைவர் என்று தம்மைச் சொல்லிக்கொள்வோர் உணரவில்லை. நயன்மைக்கட்சி உச்சநிலையில் இருந்த காலத்தும், 'இந்து' (The Hindu) என்னும் பிராமணர் அல்லது எதிர்க்கட்சிச்செய்தித்தாளே, பேரகலத்தில் கஉ (12) அல்லது கசு (16) பக்கங்கொண்டு பல்துறைச் செய்திகளையும் வெளியிட்டு, நாடு முழுதும் பெருவாரியாகப் பரவி வழங்கிற்று- 'நயன்மை' (Justice) என்று கட்சிப் பெயரே தாங்கிய நயன்மைக் கட்சித் தாளோ. சிற்றக லத்தில் சு (6) அல்லது அ (8) பக்கமேகொண்டு பெரும்பாலும் கட்சிச் செய்திகளையே வெளியிட்டதனால், 'இந்து' போலப் பரவி நிலையாது கட்சியொடு மடிந்தது. இன்றும் 'இந்து,' 'இந்தியன் எக்திசுப்பிரசு' 'மெயில்' போன்ற ஆங்லத்தாளோ. 'தினமணி', 'சுதேசமித்திரன்' போன்ற தமிழ்த்தாளோ, தமிழனுக்கு ஒன்றுமில்லை. தமிழருட் கோடிச் செல்வர் பலருளர். ஆட்சியதிகாரமும் தமிழன் கையில் உள்ளது. செய்தித்தாளால் இழப்பும் நேராது. கருத்துப் பரவுவதுடன் பலர் பிழைக் கவுஞ் செய்வர். ஆயினும், ஒருவர் மூளையிலேனும் தாளுணர்ச்சி தோன்றவில்லை.

நயன்மைக் கட்சி ஆரியத்திற்கு மாறானதாகவிருந்தும், அக் கட்சித் தலைவரான செல்வர் சிலர், தம் அறுபான் விழாவில் வெள்ளிக் குடமும் பொற்குடமும் பிராமணர்க்குத் தானஞ்செய்து அவர் காலில் விழுந்து கும்பிடுவதும், பிராமணரைக் கொண்டு வேதமோதுவித்துச் சமற்கிருதத்திற் சடங்கு நிகழ்த்துவதும், அறுபான் பிராமணர்க்கு இல்லங் கட்டிக் கொடுப்பதும், மற்றக் காலங்களிலும் பிராமணரையே கணக்கராகவும் சமையற்காரராகவும் அமர்த்திக் கொள்வதும், எத்துணைப் பேதைமையும் மானக்கேடுமான செயல்!

நயன்மைக்கட்சி ஆண்ட நாட்டுப்பரப்பில், முழுமையாகவும் பெரும் பகுதியாகவும் தமிழ்நாடு சேர்ந்திருந்தும், ஒருபோதும் தமிழன் முதல மைச்சனானதுமில்லை; தலைமைத் தீர்ப்பாளனானதுமில்லை. இன்றுவரை எத்தனையரோ பிராமணரும் தெலுங்கரும் தலைமைத் தீர்ப்பாளராகியுள் ளனர். ஆயின், இன்னும் தமிழர் ஒருவர்கூட அப்பதவியைத் தாங்க வில்லை. சென்ற ஆண்டு நிகழ்ந்த சென்னைப் பல்கலைக்கழகத் துணைக் கண்காணகர் பதவியமர்த்தத்திற்குப் பரிந்துரைத்த பட்டிகை யுறுப்பினர் மூவரும், தமிழ்ப் பற்றற்ற தெலுங்கரே.

பிராமணர் தமிழிசையையும் தமிழ் நடத்தையுமே கருநாடக சங் கீதமென்றும் பரதநாட்டியமென்றும் பெயரிட்டுக்கொண்டு, அவற்றை

ஆரியமுறையில் வளர்க்கப் பல்வேறு கழகங்களையும் மன்றங்களையும் அமைத்துள்ளனர். தமிழர் இசைநுட்பத்தை அறிந்து தியாகராசர் கீர்த்தனைகள்போல உயர்மெட்டுக்களில் தமிழ்ப் பாட்டுக்களை இயற்றுவிக்காதும், குலவேற்றுமையின்றித் தமிழிசைவாணரை ஊக்குவிக்காதும், தமிழிசைச் சங்கத்தின் பயனற்ற பண்ணாராய்ச்சி செய்துகொண்டும், ஆரியரைத் தலைமைதாங்க அழைத்துக்கொண்டும், நாடகத் தமிழை அறவே கைவிட்டும், தமிழ்க்கலை நாகரிக வளர்ச்சி பற்றிச் சிறிதுங் கவலையின்றி யிருந்துவருகின்றனர்.

சிவநெறியும் திருமால்நெறியும் தூய தமிழ் மதங்களாயிருந்தும், இன்றும் கோவில் வழிபாடு பிராமணராலும் சமற்கிருதத்திலுமே நடத்தப்பட்டு வருகின்றது. நயன்மைக்கட்சித் தலைவர் ஆட்சியிலுள்ள கோவில்களிலும் இதுவே நிலைமை.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி தமிழ் சமற்கிருதக் கிளைமொழி என்னும் முடிவுதோன்றப் பிராம்மணரால் தொகுக்கடபட்டிருப்பதை அறிந்தும், தி. மு. க. ஆட்சி அதைத் திருத்துவதற்குத் தினையளவும் முயற்சி செய்யவில்லை. இந்நிலைமையில் தமிழர் எங்ஙனம் முன்னேற முடியும்? இந்தியை எங்ஙன் ஒழிக்க வியலும்? ஞா. தே.

திருவள்ளுவர் ஈராயிரமாண்டு நிறைவு விழா.

திருவள்ளுவர் காலம் கி. மு. ௯-ஆம் நூற்றாண்டுவரை செல்லுதற்கிடமுண்டேனும், கி. மு. உ-ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியதன்று என்பது முடிந்த முடிபாம். அம்முடிபுப்படி, சென்ற நூற்றாண்டிலேயே திருவள்ளுவர் ஈராயிரவாட்டை விழாவைக் கொண்டாடியிருத்தல் வேண்டும். ஆயின், அன்று தமிழகம் விழிப்புறாமையால் அது தவறிவிட்டது. எனினும், செய்ய வேண்டுவதைச் செய்யாமையினும் பிந்திச்செய்வது மேலாதலால், இந் நூற்றாண்டிலேனும் நாம் கொண்டாட நேர்ந்தது பற்றி மகிழ்வுற வேண்டும்.

திருவள்ளுவர் காலம் கி. மு. உ-ஆம் நூற்றாண்டென்று முடிவு செய்யப் பெற்றிருப்பினும், மறைமலையடிகளின் மாபெரு மாண்பு நோக்கியும் அவர்கள் வகுத்த தொடராண்டு வழக்கூன்றியமை பற்றியும், அதை மாற்றாதிருப்பதே தக்கதாம்.

திருவள்ளுவர் விழாவைப் பழைய முறைப்படி மேழ (சித்திரை) மாதத்திற் சிலரும், புதிய முறைப்படி சுறவ (தை) மாதத்திற் சிலரும், திருவள்ளுவர் மறைந்தநாட் கொள்கைப்படி கும்ப (மாசி) மாதத்திற் சிலரும், கொண்டாடலாம். உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தம் ஏந்தும் (வசதியும்) விருப்பமும் பற்றி எம்மாதத்திலும் கொண்டாடுக.

ஆயின், உ. த க. சார்பான பொதுவிழா, அச்சிலிருக்கும் திருக்குறள் தமிழ்மரபுரை அச்சானவுடன் அதன் வெளியீட்டுவிழாவொடும் கழக ஆட்டை விழாவொடும் சேர்ந்தே, மதுரையிலேனும் திருப்பாதிரிப்புலியூரிலேனும் நடைபெறும். அதன் விளத்தமான அறிவிப்பு விடைமாதத் 'தென்மொழி'யில் வெளிவரும்.

திருவள்ளுவ ஈராயிரவாட்டை விழாவைக் கொண்டாடுவோர் விளம்பர நோக்கும் வணிகநோக்குமின்றி உண்மையான முறையிற் கொண்டாடுவதே, திருவள்ளுவர் பெருமைக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் ஏற்றதாகும். ஒரு நாளைக்கு ஒரு குறள் மேனியோ குறள் முழுதுமோ குருட்டுத் தனமாகப் பொறிவினை முறையில் உருப்போடுவதும், ஓரறிவுயிருமற்ற சுவர்களில் எழுதி வைப்பதும், திருவள்ளுவர் கருத்திற் கேற்றவையல்ல. அதனால், அங்ஙனஞ் செய்பவர்க்கும் வீண்முயற்சியன்றி மறுமைக்கேற்ப ஒரு பயனும் விளையாது. ஏமாற்று வினைப்பயன் இம்மையிலும் நீடிக்காது.

குல மத கட்சி வேறுபாடின்றித் தமிழர் அனைவரும் ஓரினமாக ஒன்றுபடுவதும், தமிழ்ப்பெயரே தாங்குவதும், தமிழிற்பேசும்போது தூய நடையிலேயே பேசுவதும், தம்மாலியன்றவரை பிறருக்கு நன்மை செய்வதும், உள்ளும் புறம்பும் ஒத்த வாய்மையைப் படிப்படியாகவேனுங் கடைப்பிடிப்பதுமே, திருவள்ளுவர் உள்ளத்திற் கேற்ற செயல்களாம். திருவள்ளுவர் கள்ளுண்டலைக் கண்டிப்பதுபோன்றே சூதாட்டையுங் கண்டிப்பதால், தனிப்பட்டவராயினும் அரசினராயினும் சூதாட்டவகையிற் பொருளீட்டாமையும் திருவள்ளுவர் திருவுள்ளத்திற் கேற்றதாம். குறள் நெறியைக் கைக்கொள்ளாதவர் திருவள்ளுவர் விழாவைக் கொண்டாடுவது, ஏசுபெருமானைக் குறுக்கையில் (சிலுவையில்) அறைந்தவர் முழங்காற்படியிட்டு அவரை வாழ்த்தி வணங்கிய தொத்ததே.

—ஞா. தே.

பாய்புலியே!
எங்கே உன் சீற்றம்?

-துரை-மாணிக்கம்.

இன்னமும் எத்தனை யாண்டுகள் தமிழா
இங்ஙனே உணர்வற்றிருப்பாய்–? —நீ
இங்ஙனே உணர்வற்றிருப்பாய்?

1. தின்னும் இனப்பகை உன்றனை மாய்த்தது;
தீராத மடமைநின் இனத்தையே சாய்த்தது;
மன்னும் அடிமையா வாழ்வென வாய்த்தது?
மாளாத துயரையா உன்மரம் காய்த்தது? (இன்)

2. வள்ளுவர் பிறந்துமீ ராயிரம் ஆண்டுகள்
வந்தன; போயின! எத்தனைத் தாண்டுகள்?
கொள்ளுமுட் பகைகளே அடிமையின் கூண்டுகள்;
கூடினை யாயின்உன் பகைவரோ பூண்டுகள்! (இன்)

3. எத்தனை எத்தனை விடுதலைப் பாட்டுகள்!
இற்றன வோஉன்றன் கல்மனப் பூட்டுகள்!
ஒத்தெழுந் தனையெனில் என்செயும் வேட்டுகள்?
உடைந்துதூள் ஆகாவோ பகைவர்கால் மூட்டுகள்? (இன்)

4. குலப்பிரி வின்னமும் உனைவிட்ட தில்லையே!
கூறுகூ றுய்ப்பிரிந் திருப்பதால் தொல்லையே!
மலப்புழுப் போலவும் நெளிந்தாயா? இல்லையே!
மனத்துவை; மறவாதே! உனக்கிது எல்லையே! (இன்)

5. மாந்தரின் இனத்துளே முதலவன் நீதான்!
மற்றிந்நாள் உலகினில் கடையவன் நீதான்!
வேந்தனும் அன்றுநீ எனின், இன்றோர் ஈ தான்,
வெட்கிலை யாமனம்? பிறர்க்கு நீ 'சீ'தான்! (இன்)

6. பிறர்க்கிலா இலக்கிய இலக்கணங் கொண்டனை!
பின்வரும் உலகுக்கும் அறம்முன்பே விண்டனை!
மறக்கிலா ஒளிவாழ்வும் முன்பேநீ கண்டனை!
மற்றதற் கோஇந்நாள் அடிமையாந் தண்டனை? (இன்)

7. பொய்ம்மையே பட்டெனப் போர்த்திக்கொண் டாயா?
புளித்ததும் நுரைத்ததும் தின்னநீ நாயா?

மெய்ம்மையே அறமென்ற செந்தமிழ்ச் சேயா?
மேய்வதே வாழ்வெனச் சொல்வதுன் வாயா? (இன்)

8 அரசியல் வாழ்வெனிற் புளுகுதல் அறமா?
அயலவர் முன்னர்உன் சொற்சோர்வு மறமா?
முரசறைந் தரசோச்சல் நீ கல்லாத் திறமா?
முக்கால எல்லைக்கும் நீ பீற்றல் முறமா? (இன்)

9. தமிழனைத் தமிழனே தாழ்த்துகின் றானே!
தமைமீட்க எழுவோரைப் புறம்வீழ்த்து வானே!
சிமிழ்க்காத போரெனில் இவன்நீந்தும் மீனே!
சிற்சில காலமாய் அழிகின்றான் தானே? (இன்)

10. எத்தனை எத்தனைப் பேர்வந்து சொல்வது?
இழுத்திழுத் தேதுயின் றால்என்று வெல்வது?
சொத்தெலாம் போனபின் எவர்வழிச் செல்வது?
சோம்பலை முறியென்றால் எனையாநீ கொல்வது? (இன்)

11. மனைவிக்கும் பிள்ளைக்கும் வாழ்ந்தாய் முன்நாளை!
மற்றிவர் தமைமறந் தெழுவாய்இந் நாளை
எனையொப்ப விலையெனில் அவரையும் வாளை
எந்தச்செய் திட்டுவா! பார்,பகைத் தூளை (இன்)

12. ஆரியர் இடுவலை அவிழ்க்க ஒண்ணாதே!
அவர்திறம் அறிவென மயங்கி எண்ணாதே!
நேரியர் அவரென நினைந்து பண்ணாதே!
நேயரெ னில்மெய்ப்பூ ணாலும் ஒண்ணாதே!

13. தமிழர்க்குத் தமிழ்மொழிப் பற்றுடை யானம்!
தமிழப்பற்றில் லாதவர் செயலேமாய் மாலம்!
உமிழ்தகுந் தன்மையோர் போடுவார் கோலம்.
ஒன்றிணை ந் தெழின்கேட் பாய்பகை ஒலம்! (இன்)

14. அயலவர் சூழ்ச்சி,நீ அறியாத கலையா?
அடிமைக்கு வாய்ச்சோறு நீபெறும் விலையா?
புயல்போலும் பகைசிறின் உனக்கது மலையா?
போவார்க்கும் வருவார்க்கும் நீவாழைக் குலையா? (இன்)

15. எந்தமிழ் மொழிபேணி வருகநீ யாண்டும்.
இழந்தநின் பேராற்றல் எழ,அது தூண்டும்!

வெந்திறல் ஆண்மையொடு நீளழல் வேண்டும்!
வீழ்கின்ற பகையோடு அடிமையுனைத் தாண்டும்! (இன்)

16. வடவர்க்குத் தமிழ்நாடு வாழும்பட் டயமா?
வல்லதோ ரடிமைக்கு வேண்டுதல் நயமா?
மடமைக்குத் தமிழ்நாடு மீன்மேயும் கயமா?
மறந்தரும் விறல்தெய்வம் என்றுமவர் வயமா? (இன்)

17. ஏழைக்குப் பாற்சோறும் எறும்புக்கு விண்ணே!
எழமுடி யாதவர்க்கு விடுதலை மண்ணே!
கோழைக்குத் துணிவேற்றல் முயற்கோடாம் அண்ணே!
கும்பிகாய்ந் தாலன்றோ விடுதலைப் பண்ணே! (இன்)

18. நம்மைநாம் வீழ்த்துமோர் நாய்த்தன்மை போலே,
நாம்கண்ட தில்லையிங் கிப்புவி மேலே!
தம்மையுந் தாழ்த்தித்தம் இனத்தையும் கீழே
தள்ளுமவ் விழிசெயல் திருத்தாநாய் வாலே! (இன்)

19. மொழிநலம் இனநலம் பேணுதல் அன்றோ
முழுநலம் பெறுவழி! நாம்பெறல் என்றோ?
விழியுண்டு, வழியுண்டு! விரைகிலம் நனறோ?
வீணுக அமர்ந்துண்ண நாம்தென்னங் கன்றோ? (இன்)

20. உரிமைக்கு வித்தெல்லாம் உணர்வெல்லாம் மொழியே!
ஊமையன் நெடும்போக்குக் குண்டோநல் வழியே!
நரிமைக்கு நாய்மையோ நாட்டாண்மைக் கழியே!
நயன்மைக்கும் இயன்மைக்கும் உண்டோஓர் பழியே! (இன்)

21. விடுதலைப் பயிர்க்கெரு மொழியின்முன் னேற்றம்!
வீணர்க்கும் சோம்பர்க்கும் விளைவுண்டோ மாற்றம்?
படுதலைப் பட்டாயிற் றேன்தடு மாற்றம்?
பாய்கின்ற புலியேறே! எங்கேஉன் சீற்றம்? (இன்)

பெங்களூரில் புதிய தென்மொழி முகவர்

பாவாணர் தமிழ் மன்றம்

எண்–18, 1–ஆவது தலைமைச்சாலை, வசந்தநகர், பெங்களூர்.

(பாவாணர் நூல்களும் விலைக்குக் கிடைக்கும்)

இன எச்சம்

-புலவர். தி. நா. அறிவுஒளி

'இன எச்சம்' என்பதொன்றுண்டு. மொழித்துறையில் குறிப்பெச்சம், சொல்லெச்சம் என்பதும், இலக்கணத்தில் எச்சங்களும் (வினையெச்சம், பெயரெச்சம் முதலிய) கண்டோர் 'இன எச்சம்' உணர்வது நனி இன்றியமையாததேயாம். இனத்தின் வளர்ச்சிக்கும் இனமரபின் மலர்ச்சிக்கும் பயன்படுவனவெல்லாம் இன எச்சமாகும்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர் எச்சத்தாற் காணப்படும்"

என்ற வள்ளுவர் வரைவு இன எச்சத்திற்கு ஏற்புடை இலக்கணமே. ஒவ்வொரு காலப்பகுதியிலும் இனமக்களின் கூட்டு வாழ்வும், தனிவாழ்வும் அமைந்துள்ளது. அவ்வப்போது அவ்வினத்தார் தம் வருங்கால மரபெச்சத்தினர்க்களிக்கும் பண்புக்கொடையும், பயன் கொடையுமே 'இன எச்சமாம்'.

சென்ற தலைமுறையின் கொடையைவிட நிகழ்தலைமுறையின் 'இனஎச்சக்கொடை' சீரியதாயிருக்க வேண்டும். அதே போல் வருந் தலைமுறையின் கொடை முன்னதைவிடச் சீரியதாயிருக்க வேண்டும். உயிரோட்டமுள்ள இனங்களில் இந்நிலை அமையும். உயிராற்றல் குன்றிய-குன்றிவரும்-இனத்தாரிடம் இவ்வளர்ச்சி நிலைகுன்றிக் குறைந்து வருவதை யறியமுடியும்.

இடைக்காலத் தமிழினத்தின் 'இனஎச்சம்' என்று குறிப்பிட்டுரைக்கக் கூடிய வகையில் ஏதும் நமக்குக் கிட்டவில்லை. ஆயின், நாம் வருங்காலத் தமிழினத்துக்கு 'யாது நல்குவோம்? என்பதை ஆய்ந்து, ஆவன செய்தல்வேண்டும். கடலில் ஓவாது ஒலியலையும் கலியலையும் உண்டாகிக் கடலின் உயிர்ப்பை என்ஞான்றும் வளர்த்து வருவதுபோல, இனக் கடலில் ஓவாது உயிர்ப்பண்பும் வாழ்வுப்பயனும் எனும் ஆண்-பெண்ணலைகள் கன்னல்தொறும்; நாழிகைதோறும் புதுப்புதிதாகத் தோன்றிக் கிளைத்துப் படர்ந்து வளர்ந்து பெருக வேண்டுவது முறையாகும் கோவில்களில் திருவிழாவுக்கென்று 'நிலையான கட்டளை' ஏற்படுத்தி வைத்து, ஆண்டுதோறும் விழா தங்குதடையின்றி இனிது நடைபெற வழிசெய்வர். அதுபோன்றே இன ஆக்கம் பெருகுவதற்கேற்ப நிலையான 'எச்சக் கட்டளை' யொன்றை இந்

நூற்றாண்டில் தமிழர் அமைத்து, அஃது இனிவரும் ஆண்டுகள் தோறும் தமிழின ஆக்கத்திற் புதுப்புது ஊக்க விளைவுகளைத் தேக்க வேண்டும்.

தமிழினத்தின் வேர் கிளைத்துப் பரவுதற்கு வேண்டிய நில வாய்ப்பு மிக வேண்டும். தமிழின வளர்ச்சிக்குத் தமிழர் வாழ்வியல் உயர்வு மிகுதல் நனி இன்றியமையாததாகும். பண்டைத் தமிழறத் தமிழ்ப் பண்பாட்டு, ஒழுகலாற்று நெறியும், இற்றை அறிவியல்–ஆய்வியல்–ஆக்கப்புதுமை வளமும் தமிழர் தனி–பொது வாழ்வுகளில் நிறைந்து பொலிதல் தலையாய வேண்டுகையாம். உலகினர், உலகுக்கு அளித்த நுண்மை–பருமை கொடையாக்கங்களுக்கு இணையாகத் தமிழர் அளிக்க வேண்டியவை எண்ணிலவுள. இது குறித்து நம்மனையோர் எண்ணிச் செயல்படுவது மிகமிக இன்றியமையாததாம்.

பயிர்வளம் நாடும் உழவன், நீர் ஓடும் வாய்க்காலின் ஒரு புறம் மடையடைத்துத் தடுப்பான்; மறுபுறம் அடைத்திருக்கும் மடையைத் திறந்து நீர் பாய விடுப்பான்! ஆம். ஒருபுறம் அடைப்புப் பணியும் மறுபுறம் தொடக்கப் பணியும் வாழ்வில் அமைந்தாலொழிய வளவாழ்வின் வளர்ச்சி தொடராது. செலவைத் தடுத்தும் வரவை மிகுத்தும் அமைப்போர்க்கன்றோ செல்வம் வளரும்? ஆதே நிலையில் தமிழினம் சிலதுறைகளை அழித்துப் பணி செய்தும், சில புதுத்துறைகளைப் புதுக்கிப் பணி தொடர்ந்தும் வருதல் வேண்டும்.

அரசியற்றுறையில் தமிழினத்தார் நிலையான வல்லரசை, நல்லரசாக அமைத்தல் இன்றியமையாதது. அறிவியல் துறையில் தமிழினத்தார் தக்காங்கு ஈடுபட்டு உலகளாவிய தொண்டாற்றி மன்பதையியல்–பொருளியல்–வாழ்வியல் ஆக்கத்திற்குதவுதல் மிகமிக இன்றியமையாததாம். இனஎச்சமாக ஒரு பெரும் வரலாறு அமைவதற்குரிய படைப்புகள்–உயிராக்கங்கள்–தமிழினத்தாற் செய்யப்படுதல் வேண்டும். நேற்றை மறந்து இன்றைக்கேங்கித் திரிந்துபட்டு நாளை இழந்துபடுதல் தமிழின மரபழிவுக்கு வழி செய்யும். கற்புடைக் கிழத்தி தங்குடி விளங்க நன்மக்கள் ஈன்று புறந்தர அவாவுதல் எத்துணைச் சால்போ, அத்துணைச் சால்பாகும் ஓரினமக்கள் 'இனஎச்சம்' விழைவதும்!

இரத்தலைப் பற்றித் திருவள்ளுவர் ... ...!

-சண்முக. விந்தைவேலன்.

இரத்தல் என்பது இல்லை என்று ஒருவரிடம் வருந்திக் கேட்டுப் பெறுதல். வள்ளுவரும் இரத்தலைச் செய்கிறார்! அதுவும் இரப்போர் களிடத்திலே! அவ்வுலகப் பெருந்தகை ஏன் அவ்வாறு கேட்க வேண்டும்? வறுமை ஒரு கொடுமையாளி! அவ்வறுமை ஒருவனைப் பற்றினால் அவனடையும் துன்பங்கள் சொல்லி முடியாது. ஒரு துன் பத்தை அடுத்துப் பலதுன்பங்களும் வந்து சேரும். எந்த இன்பத் தையும் அவன் அப்போது காணமுடியாதன்றோ? இழிவு பெறத் தக்க சோர்வு தோன்றும். குடியின் நற்பண்பும் கெட்டழியும்; பெற்ற தாயா லும் அவன் புறக்கணிக்கப்படுவான். அவன் கண்மூடி உறங்கவும் முடியாது. உப்புக்கும் கஞ்சிக்கும் எமனாகத் திரிவான். இத்தகைய நிலையில் ஒருவனை அடுத்து அவன் இரக்கவும் கூடும்.

பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பது உண்மையே- பொருள் வைத்திருப்போர் உதவுதல் நன்றன்றோ? வறியவர்க்குக் கொடுப்பதுதானே ஈகை என்பது? தக்கார்க்கு உதவி செய்தல் சிறந்ததன்றோ? பசியாற்றுவது சிறந்த அறமாகும்; ஆற்றலுமாம். மழை பொய்த்துவிட்டால் உயிர்களைப் பசிவருத்தும். மழை உயிர்க்கு அமிழ்தம். அது பயன் கருதாது உலகிற்குதவுகிறது. மாந்தரிலும் பயன்கருதாது உதவுவோர் உண்டு. பேரறிவாளர் அத்தகையோரே. அவரது செல்வம் ஊர் நடுவே உள்ள உண்ணும் நீர்க்குளம் போல, பழமரம்போலப் பயன்படுவதாம். அவரிடத்தும் வறுமை நேரலாம்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றுச் சிறப்பார் நிகழ்வுகள் தமிழினத்தில் பெரிதும் நிகழாமை அவ்வினத்துக்கே பெருமாசாகும். ஒவ்வொரு நாடும் தம்பங்கில் 'வரலாற்றுக் கோவில்' எழுப்புகையில், தமிழினம் வறிதே 'வயிற்றுப் பெருமானாக'க் கிடப்பது நாணத்தக்கதாம். நாளையுலகம் தமிழினத்தையே நோக்கிக் கொண்டிருக்கவும், தமிழர் அறிவையும் குரலையும் ஆணையையும் ஏற்று இயங்கிக் கொண்டிருக்கவும் வேண்டிய அனைத்து முயற்சிகளுந்தான் இன் எச்சமாகும் அந்நிலையை உருவாக்கும் ஒரு சூழ்நிலையையும் யான் காண்கிலேன். தமிழினமே, இது குறித்து எண்ணு வையோ?

ஆயினும் இயன்றபோது உதவுவதில் அவர்கள் தவறுவதில்லை முகில் வறண்டிருந்தாலும் குளிர்காற்று வீசும்போது மழையெனப் பொழியுமன்றோ, அதுபோல!

பொருளிடத்துப் பற்றுக்கொண்டு பிறர்க்கு ஈயாதவரும் உலகில் உளர். அறு குற்றம் என்கின்றார் வள்ளுவர். பிறர்க்குதவாது தானும் பயனுறாது சேர்த்த செல்வம் மிகுந்த அழகுள்ள ஒருத்தி தனியாக வாழ்ந்து முதுமை அடைந்தது போல என நயமாக எடுத்துரைக்கின்றார். பிறரது அன்பைக் கைவிட்டுத் தன்னையும் வருத்தி அறத்தையும் போற்றாமல் சேர்த்த ஒருவனது செல்வத்தை மற்றவரே நுகர்வர் என எடுத்துக் காட்டுகிறார்.

இவ்வாறு கூறும் வள்ளுவர் கொடுப்பவரிடமே கேட்க வேண்டும் எனக்குறிப்பிடுகிறார். ஒளிக்காத நெஞ்சமுடையவர், கடமை உணர்வு கொண்டிருப்பவர், கனிந்த அன்பு காட்டுபவர் ஒன்றைக் கொடுப்பதே அழகு என நயம்படப் புலப்படுத்தி மகிழ்கிறார். துன்புறு நிலையில் வந்தெய்வது ஓர் இன்பந்தானே! உள்ளதை மறைப்பதைக் கனவிலும் கருதாதவரிடம் மேற்கூறிய இன்பத்தைப் பெறலாம். இவ்வாறான நன்மக்களிருப்பதாலேயே இரத்தலை மேற்கொள்வது இவ்வுலகில் நிலைத்திருக்கிறது. கொடுப்பவரின் புகழ், பொருள் இல்லை என வருந்திக் கேட்டுக் கொள்வதில்தான் அடங்கி நிற்கிறது. இல்லையாயின் இவ்வுலகம் உணர்விலா மரப்பாவை ஆட்டம் போல இயங்கிக்கொண்டிருக்கும்.

உள்ளம் உவந்து கொடுப்பாரிடத்தும் கேட்காதிருப்பதே நல்லது. அது கோடிமடங்கு நன்மையானது என வள்ளுவர் குறிக்கிறார். இரந்துதான் உயிர்வாழ வேண்டும் என இறைவன் உயிர்களைப் படைக்கவில்லை. அவ்வாறு படைத்திருந்தால் அவனும் இரந்து அலைந்து கெட்டொழியட்டும் என உணர்வு மிகுந்த நிலையில் எடுத்துரைக்கின்றார்.

வறுமை காரணமாகவும் தீங்கு செய்தல் கூடாதென்பது வள்ளுவர் கருத்து. பிறர் பொருளை விரும்புதல் கூடாது. தாயின் பசி கண்டபோதும் பழிநேரும் ஒன்றைச் செய்தல் கூடாது. இவ்வளவு உயர்ந்த குறிக்கோளுடன் வாழக்கூறும் வள்ளுவர் ஒருவர் முயற்சி செய்யாமல் இரத்தலை மேற்கொள்ளுவதை விரும்புவாரா?

தெளிந்த நீர்போன்ற கூழேயானாலும் தன் முயற்சியால் பெற்றால் அதுவே இனியது என்கிறார். பசுவிற்கு நீர்வேண்டும் எனக் கேட்டலும் இழிவே எனச் சுட்டி முயற்சியால் வாழ்வதே சிறந்ததென்கிறார்.

இரப்போர் எல்லோரிடமும் நான் இரப்பது ஒன்றுண்டு. அது "கேட்பதை ஒளிப்பவரிடத்துச் சென்று கேட்க வேண்டா." என்பது. ஆம், அவரே கூறுவதுபோ 'இரப்பன்' எனக்குறள் கூறுகிறது. (குறள்: 1067-ஐ நோக்குக.)

பெங்களூர், பாவாணர் தமிழ்மன்றத்திற்கு வாழ்த்து

-பெருஞ்சித்திரன்-

(தி. பி. 1999-ஆம் ஆண்டு நளித்திங்கள் 9-ஆம் பக்கல் (24-11-68) அன்றுநடந்த தொடக்கவிழாவில் வாழ்த்தி அளித்தது)

பொங்குங் கடல்சூழ்ந்த பூவுலகில் எந்தமிழர்-
எங்கண் இருந்தாலும் எந்தமிழும் அங்கிருக்கும்!
திங்கள் உலகத்தும் தீந்தமிழ்போய் வாழ்வெடுக்கும்!
மங்கா வரலாற்று மாண்பிதுவாம்; மெய்ம்மையிதாம்!
இங்கிதனுக் கோரெடுத்துக் காட்டாய் இலங்குவதே,
பெங்களூர் வாழும் பிழையாத் தமிழுளங்கள்,
பொங்கி எழுமுணர்வால், பொய்யாத தொண்டுளத்தால்
மூவாத செந்தமிழ்க்கே மூச்சிருக்கும் நோக்கத்தால்
பாவாணர் தம்மின் பெயரால் தமிழ்மன்றம்
ஏவாமல் தோற்றி இருக்கின்ற நற்செயலும்!
நாவால் தமிழ்வாழ்க வாழ்கவென நூறுமுறை
ஆவல் பெருக அரற்றியதால் வாழ்ந்ததென்ன?
தூவல் எடுத்துத் துலங்குகவே செந்தமிழென்
றெண்ணற்ற வாறுய் எழுதியதால் கண்டதென்ன?
பண்ணெடுத்துப் பாடிப் பைந்தமிழை வாழ்த்தியவர்
எண்ணற்ற கோடி! இருந்தும் பயனென்ன?
கண்ணற்றேம்; மேன்மைக் கருத்தற்றேம்; மானமற்றேம்!
உண்ணற்கும் மேலாய் உடுத்தற்கும் மாண்பற்றேம்!
மண்ணற்ற நீண்ட மரம்போல் நிலையற்றேம்!
பேச்சுப்பேச் சென்றுபல பேசி முடித்துவிட்டால்
ஆச்சுதமிழ்த் தொண்டென்போம்; அப்புறமோ பொய்வாழ்க்கை,
வாய்த்த பணத்தின்முன் வாயைப் பிளக்கின்றேம்!
ஏய்த்ததுவோ, கையூட்டோ, எவ்வழியே ஆனாலும்
காய்த்த மரக்கிளையைக் கையால் உலுக்கிடல்போல்
பேய்த்தன்மை கொண்டு பணத்திற் கலைகின்றேம்!
தேடும் பெரும்பணத்தால் தேடுகின்ற சீரென்ன?
வாடும் மனைவியென்றும் மக்களென்றும் வாழ்வெல்லாம்
கூறிவரல் அல்லால் குமுகாய வாழ்விழந்தோம்!
ஏறிவரும் பேரிழிவை எள்ளின்மூக் கத்துணையும்
எண்ணித் துடைத்திடவே எவ்வழியும் கண்டறியோம்!
மண்ணில் தமிழினத்தின் மாண்பைப் புதுக்குகிலோம்!
இந்நிலையை வீழ்த்தி இறுதிநிலை கண்டிடவும்
தந்நிலையை முன்போல் தமிழர்க்குத் தந்திடவும்
பாவாணர் மன்றம் பிறந்ததெனில் மாறில்லை!
காவாத செந்தமிழும் காக்கப் பெறுமினியே!
நந்தமிழ்க்குத் தொண்டுசெய்யும் நற்றமிழர் மன்றமிதே!
எந்தமிழைக் காக்க எழுந்த தமிழ்மன்றம்!
ஆகவே பாவாணர் மன்றம் அணிபெறுக!
ஈகைப் பெரும்பணியால் இம்மன்றம் தொண்டாற்றி
அன்றன்றும் செந்தமிழ்போல் ஆன்ற புகழ்பெற்றே
என்றென்றும் வாழ்க இனிது!

உலகத் தமிழ்க் கழகம்.

(செய்தியும்–அறிக்கையும்)

செய்திகள்

1. பறம்புக்குடி-கிளைக்கழகம்.

உ. த. கழகத்தின் சார்பாக சிலை சகு (29—12—68)-ஆம் பக்கல் பறம்புக்குடி ஊர்க்கிளை அமைப்புக் கூட்டம் மாவட்டத் தலைவர். திரு. தமிழ்க் குடிமகன், க. மு. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை பறம்புக்குடி–கிளைக்கழகத்தின் பொறுப்பாளர்களாகப் பின் வருவோர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். திரு. தமிழ்க்குடிமகன்–தலைவர்; திரு. அறிவன்–செயலர்; திரு. பொன். முத்தையா–பொருளாளர்.

சுறவத் திங்கள் முதற் கிழமையில் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டினைக் கொண்டாடவும் அதற்குப் பர். மெ. அழகனாரை அழைக்கவும் முடிவு செய்யப்பெற்றது. ஊர்க்கிளையின் அடுத்த கூட்டம் 12–1–69–இல் நடத்துவது என முடிவு செய்யப் பெற்றது.

2. செயங்கொண்டம்-வட்டார ஆசிரியர் கழகச் சிறப்புக் கூட்டம்.

தி. பி. கூகூ சிலை ச (18—12—68)-ஆம் நாள் அறிவன் கிழமை மாலை 2½- மணிக்குச் செயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத் (தெற்குத்) தொடக்கப்பள்ளியில் உயர்திரு. க. அரங்கநாதன், இ. க. (ஆணையர்) அவர்கள் தலைமையில் சிறப்புக்கூட்டம் ஒன்று நடந்தது. அப்பொழுது உயர்திரு. கி. சுந்தரமூர்த்தி அவர்கள் 'ஆசிரியர் பணி' என்பது பற்றியும், திருவாட்டி. தாமரை–பெருஞ்சித்திரனார் அவர்கள் 'பெண்டிர் தமிழ்த்தொண்டு' என்பது பற்றியும், தென்மொழி ஆசிரியர். பெருஞ்சித்திரனார் (பொதுச் செயலாளர். உ. த. க.) அவர்கள் 'தமிழின் மறுமலர்ச்சி' என்பது பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். இக்கூட்டம் செயங்கொண்டம் வட்டார ஆசிரியர்களிடத்தில் பெரியதொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதென்றும், உலகத் தமிழ்க் கழகத்திற்கு நல்ல ஆக்கந் தேடித்தந்ததென்றும் கூறினால் மிகையாகாது. திரு. அரங்கநாதன் அவர்களின் நன்றி கூறலுக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது,

கூட்ட முடிவில் செயங்கொண்டத்திலும் சுற்றுப்புற ஊர்களிலும் உலகத் தமிழ்க் கழகத்தின் கிளைகளை ஏற்படுத்துமாறு பொதுச் செயலாளர். கேட்டுக் கொண்டதற் கிணங்க விரைவில் கிளைகள் பலவற்றைத் தொடங்க அவ்வவ் வட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் செயலாளரிடம் உறுதி கூறினர்.

அறிக்கை-2.

அ: மாவட்ட அமைப்பாளர்களுக்கு:

மாவட்ட அமைப்பாளர்கள் சிலர் சில விளக்கங்களைக் கேட்டிருக்கின்றனர். விளக்கங்கள் எல்லார்க்கும் பொதுவாகையால் இங்கு வெளியிடப் பெறுகின்றன.

1. ஏற்கனவே தொடங்கிச் செயலாற்றிவரும் ஏனைய தமிழ் மன்றங்கள் உலகத் தமிழ்க் கழகத்துடன் இணைய விரும்பின் என்ன செய்தல் வேண்டும்?

தூய தமிழ்ப் பெயர்கள் தாங்கிய பிற மன்றங்கள் உ. த. கவுடன் இணைய விரும்பின் ஏற்கனவே உள்ள அம் மன்றங்களின் பெயர்களை மாற்றவேண்டியதில்லை. அப்பெயருடன் "உலகத் தமிழ்க் கழகத்தின் கிளை" என்ற தொடரை மட்டும் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். முன்பே உள்ள உறுப்பினர்களைப் புதிய உ. த. க. உறுப்பினர்களாகப் பதிவுசெய்து கொள்ள வேண்டும். நம் நெறிமுறைகள், கொள்கைகளை அவை ஏற்றுக்கொண்டதாகவும், இனி, இதன் கிளைக்கழகமாக அம் மன்றம் செயலாற்றும் என்றும் ஓர் அறிக்கை வெளிப்படுத்தப்பெற்று முறைப்படி எல்லா ஆவணங்களிலும் இதைச் செயலுக்குக் கொண்டு வருதல் வேண்டும். முன்பே உள்ள உறுப்பினர்களின் பிறமொழிப் பெயர்களைத் தூய தனித்தமிழ்ப் பெயராக வைத்துக்கொள்ள வேண்டும். பெயர்களைச் சட்டப்படி மாற்ற விரும்பாதவர்கள் தற்காலிகமாக வேனும் தனித்தமிழ்ப் பெயர்களைத் தாங்குதல் வேண்டும். கிளைக் கழகத் தலைவர்களும் இம் முறையைப் பின்பற்றிப் புதிதாக உறுப்பினராவோரைத் தனித்தமிழ்ப் பெயர்களாக மாற்றிப் பதிக.

2. சிற்றூர்க் கிளைகள் அமைக்கப்படும் பொழுது பதின்மருக்கு மேற்படும் உறுப்பினர்கள் கழகத்தில் சேரவில்லையானால் எஞ்சிய உறுப்பினர் பற்றுச் சீட்டுச் சுவடியை அக்கோப்பிலிருந்து பிரிததுப் பதினைந்து சீட்டுகளை வேறொரு கிளையமைக்கத் தரலாமா? அன்றி எஞ்சிய சீட்டுகளுடன் தலைமையகத்திற்கு விடுக்குமாறு கூறலாமா?

கழகம் தொடங்கிய ஓராண்டுவரை உறுப்பினர்கள் பதின்மருக்கு மேற்படவில்லையானால், எஞ்சிய முறிகளைத் தலைமையகத்திற்கு, மாவட்ட அமைப்பாளர் வழி விடுக்க வேண்டும். [செலவிட்ட முறிகளின் அடிப்பகுதியை அங்கேயே கிளைக்கழகத்திலேயே] நிறு கொள்ளுதல் வேண்டும். அதுபற்றிய அறிக்கை பின்னர் வரும்.

3. மாவட்ட அமைப்பாளரும் மாவட்டத் தலைவரும் ஒருவரா?

இக்கால் அமர்த்தப்பெற்ற அமைப்பாளரே மாவட்டக் குழுவின் தலைவர். மாவட்டக் குழுவின தலைவரே மாவட்டத் தலைவர். (பார்க்க: நெறிமுறைகள் ௫/3/2)

4. மாவட்ட அமைப்பாளர் செலவுகளை எப்படி ஈடுகட்டுதல் வேண்டும்?

மாவட்ட அமைப்பாளர்க்கு விரைவில் தலைமைக் கழகப் பொருளாளரிடமிருந்து ஓரளவு வைப்புத்தொகை விடுக்கப் பெறும். மேற்கொண்ட தேவைக்கும் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

5. கழக நெறிமுறைகள் விற்பனைத் தொகையை என்ன செய்வது?

கழக நெறிமுறைச் சுவடிகளின் விற்பனைத் தொகையை தலைமைக் கழகப் பொருளாளர்க்குவிடுத்து விடவேண்டும். அவ்வப்பொழுது விற்பவற்றைத் தனித்தனியாக விடுக்காமல் முழுத் தொகையையும் ஒரே முறையில்–முடியுமாயின் முன்னதாகவே விடுத்துவிட வேண்டும். கிளைக்கழகங்கள் மாவட்டப் பொருளாளர்க்கும் பொருளாளர் இன்னும் அமைக்கப் பெறவில்லையானால் மாவட்டத் தலைவர்க்கும் விடுக்க.

ஆ. மாவட்ட அமைப்பாளர்கள் சிலரும், இதுவரை அமைக்கப் பெற்ற கிளைக் கழகங்களுள் சிலவும் திசம்பர் மாத அறிக்கைகளை இதுவரை தலைமைக் கழகத்திற்கு விடுக்க வில்லை. அவை உடனே அவற்றை அனுப்பி வைத்தல் வேண்டும். நிரப்பப் பெறாத அறிக்கைகள் உளவாயின அவற்றின் தலைப்பை மட்டும் வெள்ளைத்தாளில் எழுதி ''இல்லை'' அறிக்கை (Nil Report) விடுக்க வேண்டும். எவ்வகையானும் அறிக்கை விடுப்பதைத் தவிர்தல் கூடாது.

இ. மதுரை மாவட்ட அமைப்பாளர் திரு. அருளனார் தம் பொறுப்பினின்று நீங்கிக் கொண்டார்.

ஈ. கிளைக்கழகங்கள்:

1. கீழுள்ளவர்கள் புதிய மாவட்ட அமைப்பாளர்களாக அமர்த்தப் பெற்றுள்ளனர்.

க. புதுவை: த. வளங்கோ. 31–: வ. உ. சி. தெரு, புதுவை-1

ங. நெல்லை: பா. வளவனரசு, க. மு. 13, சிவன்கோயில் வடக்குத்தெரு. பாளையங்கோட்டை நெல்லை மாவட்டம்.

ச. மதுரை: இ. மறைமலை, இ. 17 திருநகர், மதுரை-6.

2. கிளைக் கழகங்கள் உ. த க. சார்பில் பொங்கல்விழா, திருக்குறள் 2000 ஆண்டு விழா முதலியவற்றைக் கொண்டாடிச் செய்திகளை அறிவிக்கக் கேட்டுக் கொள்கின்றேன்.

மே/பா. தென்மொழி
கடலூர்–க.
சிலை: 20, தி பி. கூக.

பெருஞ்சித்திரன்,
பொதுச் செயலாளர்,
உலகத் தமிழ்க் கழகம்.

திருவள்ளுவர் 2000 ஆண்டில் செய்யத்தக்கன!

(அரசினர் சார்பில் அமைக்கப்பட்டிருக்கும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழா அமைப்புக் கூட்டத்திற்குத் தென்மொழி சார்பில் எழுதி விடுக்கப் பெற்ற கருத்துரைகள் இவை. தென்மொழி அன்பர்கள் அறியவேண்டி இங்கு வெளி யிடப்பெற்றுள்ளன)

1. திருவள்ளுவர் ஈராயிரமாண்டு நினைவாகத் தமிழகத்தில் உள்ள வடமொழி தாங்கிய ஊர்ப்பெயர்களைத் தனித்தமிழ்ப் பெய ராகமாற்றுதல்.

2 தமிழர் எல்லாருடைய பெயர்களையும் தனித்தமிழ்ப் பெயர்களாகத்தாங்கும்படி வேண்டுகோள் விடுத்தல்.

3. திருவள்ளுவர் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமைத்து அதில் உலகத்தின் எல்லா மொழிகளிலும் உள்ள சிறந்த அற நூல்களைப் பயிற்றுவித்து, அக்கல்வியில் தேர்ச்சிபெற்றவர் களையே சமயத்துறைத் தலைவர்களாகவும், அதிகாரிகளாகவும் ஆக்குதற்கு முயற்சி செய்தல்.

4. திருவள்ளுவர் ஈராயிரமாண்டில் நடைபெறும் எல்லா அரசினர் தேர்வுகளிலும் முதலாவதாகத் தேறுவோருக்குத் திரு வள்ளுவரின் வெள்ளிப் படிமமொன்றுடன், ஒரு குறிப்பிட்ட தொகையைப் பரிசாக அளித்தல்.

5. இவ்வாண்டில் தமிழகம் வந்துபோகும் வெளிநாட்டுப் பயணிகளுக்கும் அதிகாரிகளுக்கும் திருவள்ளுவரின் வெளியப் (Nickel) படிமம் ஒன்றும் திருக்குறள் ஒன்றும் அன்பளிப்பாக வழங்குதல்.

6. அஞ்சல் துறையில் இவ்வாண்டு வெளியிடும் எல்லா உறைகளின், அட்டைகளின், உள்நாட்டுறைகளின் மேலும் 'திருவள்ளுவர் ஈராயிரமாண்டு வெளியீடு' என்று வரியையோ, இக்கருத்தை ஒட்டிய வேறு வரியையோ பொறிக்கச் செய்தல்.

7. இவ்வாண்டு முழுவதும் நடைபெறும் சட்டமன்றக் கூட்டங்கள் எல்லாவற்றின் தொடக்கத்திலும் திருக்குறளின் ஒவ்வோர் அதிகாரத்தைப் படித்துவிட்டே மன்றத்தைத் தொடங்குதல்.

8. இவ்வாண்டு முதலாக அரசு வெளியிடும் அரசினர் செய்தியிதழில் (GAZETTE) திருவள்ளுவர் ஆண்டைப் பொறிக்கும் வழக்கத்தை மேற்கொள்ளுதல்

9. இவ்வாண்டு முதல் தமிழ் ஆண்டுப்பிறப்பு சுறவ (தை) மாத முதல்நாள் என அறிவித்தல்.

10. இவ்வாண்டு முழுவதும் மக்களிடையே நடைபெறும் எல்லா வகையான கூட்டங்களின் தொடக்கத்தே, திருக்குறள் அறத்துப்பாலின் ஓர் அதிகாரத்தைப் படித்த பின்பே கூட்டத்தைத் தொடங்குதல் வேண்டும் எனத் தமிழக அரசு வேண்டுகோள் விடுத்தல்.

11. இவ்வாண்டு வெளியிடப்படும் திரைப்படங்களில் எல்லாம் திருக்குறள் பெயரையோ, வரிகளையோ, கருத்துகளையோ எவ்வகையிலேனும் பயன்படுத்துமாறு படப்பிடிப்பாளர்க்கு வேண்டுகோள் விடுத்தல்.

12. திருவள்ளுவர் ஈராயிரமாண்டு நினைவாக, தமிழில் நடைபெறும் சிறந்த நாளிதழ், கிழமையிதழ், மாதவிதழ் முதலியவற்றைத் துறைதுறையாகப் பகுத்து, அவ்வத் துறையில் சிறந்தனவற்றிற்குத் திருவள்ளுவர் வெள்ளிப் படிமமும் 5000 உருபா பரிசும் வழங்குதல்.

13. திருக்குறள் கருத்துகளை எல்லாவகையிலும் பரப்பப் பெரிதும் முயற்சி செய்தல்.

14. இவ்வாண்டில் பிறக்கும் எல்லா ஆண்குழந்தைகளுக்கும் திருவள்ளுவன் என்றும், எல்லாப் பெண்குழந்தைகளுக்கும் முப்பாலிகை என்றும் பெயரிடும்படி அரசு வேண்டுகோள் விடுத்தல்.

15. இவ்வாண்டில் கட்டி முடிக்கப்பெறும் எல்லாப் பள்ளிக் கூடங்களும், பொது அங்காடிகளும், அரசினர் கட்டடங்களும் திருவள்ளுவர் பெயரையே தாங்குதல் வேண்டுமென அறிவித்தல்.

16. இவ்வாண்டு முதல் எல்லாக் கல்லூரிகளிலும், ஆங்கிலத்தில் சேக்சுபியர்போல், தமிழில் திருக்குறளைத் தனிப் பாடமாக வைத்தல்.

17. இவ்வாண்டு முதல் அறமன்றங்களில் திருக்குறளின் மேல் ஆணையிடுவதையும் ஏற்றுக்கொள்ளப் போதிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளல்.

18. அறமன்றங்களில் திருவள்ளுவர் படத்தையும் மாட்டுவித்தல்.

19. திருவள்ளுவர் ஈராயிரமாண்டு நினைவாகச் சிறைக் குற்றவாளிகளின் தண்டனைக்காலத்தை ஓரளவு குறைத்தல்.

20 1330 குறட்பாக்களையும் பொருளுடன் ஒப்பிப்பவரைப் புலவரெனப் பாராட்டி, அரசவைப் பெருமையும் வாழ்வூதியமும் தருதல்.

21. வெறும் குறட்பாக்களை மட்டும் ஒப்பிப்பவரைப் பாராட்டிப் பரிசளித்தல்.

22. தமிழக அரசின் இலச்சினையில் உள்ள கோபுரத்தை நீக்கிவிட்டுத் திருவள்ளுவர் உருவத்தையும் ஓலைச்சுவடிகளையும் அரசு முத்திரையாக மாற்றுதல்.

23. திருக்குறள் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவோரைப் பாராட்டிப் பரிசளித்தல்.

24. இவ்வாண்டு முழுவதும் திருவள்ளுவர் விழாக்களையும் பட்டிமன்றங்களையும் ஏற்பாடு செய்வித்தல்.

25. திருச்சி, சென்னை, புதுவை வானொலியில் இவ்வாண்டு முழுவதும் கூறப்பெறும் அருள்வாக்குகளைத் திருக்குறள் கருத்துகளாகவே கூறத்தக்க ஏற்பாடு செய்தல். ●

தேசியப்படை மாணவர் பயிற்சி ஏவல்கள்.

(N. C. C. COMMANDS)

மொழிப்பெரும்புலவர், ஞா. தேவநேயப் பாவாணர்.

ஆங்கிலம்	தமிழ்	இந்தி [ஆங்கில (உரோம) எழுத்தில்]
1. Attention –	கவனம்	Savdhan
2. Stand-at-ease –	ஏந்தாய்நிற்க	Vishram
3. About turn –	சுற்றித் திரும்ப	Pichhe mur
4. Right (or left) turn	வலம் (அல்லது) இடம் திரும்ப	Dahine (Ya baen) [mur
5. Squad will move to the right (or left)	சதளம் வலம் (அல்லதுஇடம்) இயங்க	Squad dahine (Ya baen) chal
6. Squad will advance (or retire)	சதளம் முன்செல்க (அல்லதுபின்வாங்க)	Squad age barhega (Ya pichhe lautege)
7. Dress up	நேராக (அல்லது செம்மையாக)	Saj je
8. Right-dress	வலம்-நேராக	Dahine Saj
9. Left-dress	இடம் நேராக	Baen Saj
10. Centre-dress	நடுவம்-நேராக	Madya Saj
11 Front rank steady	முன்னணி அசையல்	Agli line-hilo mat
12. Centre rank steady	நடுவணி அசையல்	Madya line-hilo mat
13. Rear rank steady	பின்னணி அசையல்	Pichhli line-hilo mat
14. Form up in three ranks-quick march	மூவணியமைந்து முடுகிச்செல்க	Tin line banae-tez [chal

ஆங்கிலம்	தமிழ்	இந்தி (ஆங்கில எழுத்தில்)
15. Number	எண்ணே	Ginti-kar
16. As you were	முன்போல	Jaise the
17. Open order march	திறந்த வொழுங்கிற் செல்க	Koule line chal
18. Close order march	செறிந்த வொழுங்கிற் செல்க்	Nikat line chal
19. Break off	கலைக	Swasthan
20. Dismiss	விலக	Visarjan
21. Fall-in	வரிசை படுக	Line ban
22. Fall-out	வரிசை விடுக	Line tor
23. Form three ranks	மூவணியமைக	Tin line ban
24 Form up in three ranks quick march	மூவணியமைந்து முடுகிச்செல்க	Tin line banae-tez chal
25 Right-marker	வலம்-நோக்கி	Dahine darshak
26 Slow march	மெள்ளச்செல்க	Dhire chal
27. Double march	ஓடிச்செல்க	Daur ke-chal
28. Quick march	முடுகிச்செல்க	Tez chal
29. Halt	நிற்க	Tham
30. Step out	நீளெட்டு(வைக்க)	Lamba qadam
31. Step short	குற்றெட்டு(வைக்க)	Chaota qadam
32. Wheel right/left	வலம்/இடம் வளைக	Dahine/baen ghoom
33. Marktime	அடியிரட்ட	Qadam tal
34. Salute	கையெடுக்க	Siloot
35. General salute	பொதுக்கையெடுப்பு	General siloot
36. National salute	தேசியக்கையெடுப்பு	Rashtriya siloot

ஆங்கிலம்	தமிழ்	இந்தி (ஆங்கில எழுத்தில்)
37. Salute to the front-salute	முன்கையெடுப்பு-கையெடுக்க	Samne siloot-siloot
38. Salute to the right salute	வலம்கையெடுப்பு கையெடுக்க	Dahine siloot.siloot
39. Salute to the left-salute	இடம்கையெடுப்பு கையெடுக்க	Baen siloot-siloot
40. Saluting by numbers	எண்முறைக் கையெடுப்பு	Ginti se siloot
41. Eyes right (or left)	வலம்பார்க்க	Dahinc (Ya baen) [dekh
42. Eyes front	முன்பார்க்க	Samne dekh
43. Slope-arms	படைக்கலம்சாய்க்க	Kandhe shast(r)
44. Order-arms	படைக்கலம்நிறுத்த	Bazu shast(r)
45. For inspection	உண்ணோட்டத்திற் காக	Nirikshan ke lie
46 Examine arms	படைக்கலம் தேர்க	Janch shast(r)
47. Trail arms	படைக்கலம் துலவ	Tol shast(r)
48. On-guard	காவல்மேல்	Ton shast(r)
49. Squad will fix bayonets -fix bayonets	சதளம் ஈட்டிசெருக -ஈட்டிசெருக	Squad sangin lagao -lagao sangin
50. Squad will unfix-bayonels -unfix bayonets	சதளம் ஈட்டிஉருவ -ஈட்டிஉருவ	Squad sangin uthare(g) -uthar sangin

விளக்கம்:

2. ஏந்து—வசதி.

5. சிறு கூட்டத்தைக் குறிக்கும் Squad என்னும் ஆங்கிலச் சொல் சதுரத்தைக் குறிக்கும் Squadra என்னும் இத்தாலியச் சொல்லின் திரிபாகும். சதளம் என்னும் தமிழ்ச்சொல்லும் அங்

ஙனமே. சட்டம்–சடம்–சடல்–சடலம்–சதரம்(சதுரம்), சதளம்–கூட்டம். சதளக்காரன்–பெருங்குடும்பக்காரன்.

7. Dress என்னும் ஆங்கிலச்சொல் dresser என்னும் பழம் பிரெஞ்சுச்சொல் வாயிலாக directus என்னும் இலத்தீன் சொல்லினின்று திரிந்ததாகும். Direct-to put straight.

10. நடு–நடுவு–நடுவம். இம்மூன்றையும் பெயராகவும் குறிப்புப் பெயரெச்சமாகவும் பயன்படுத்தலாம். நடுவம் என்பது பெயரெச்ச வடிவில் நடுவ என்று ஈறுகெடும்.

11. அசையல் என்பது எதிர்மறை வியங்கோள்; ஈரெண் பொது.

21. வரிசையாக, வரிசையமைக என்றும் சொல்லலாம்.

30, 31. நீளெட்டு, குற்றெட்டு என்றுலும் போதும். வைக்க ஏன்றும் இடுக என்றும் சொல்லலாம். எட்டுநீள்க, எட்டுக் குறுக என்றும் சொல்லலாம்.

33. அடியிரட்டுதல்–இட்ட அடியின்மேல் அடியிடுதல்; To step without advancing, to mark time, "அடியிரட்டித் திட்டாடுமாட்டு" (புறப்பொருள் வெண்பாமாலை, 2:8).

34. ஒருகை வணக்கத்திற்குக் கையெடுத்தல் என்னும் சொல் மிகப் பொருத்தமானதாம்.

45. நோடு–to test–உண்ணோடு–to inspect.

47. துலவுதல்–துலாக்கோல் போல் தொங்கப் பிடித்தல், to let rifles hang balanced in one hand. இது வழக்கற்றுப் போன பழஞ்சொல். துல்–துலா–துலாம். துல்–துலை–ஒப்பு, துலாக்கோல் (தராசு). தோல் என்னும் இந்திச்சொல் துல் என்பதன் திரிபே.

43, படைக்கலம் என்பது arm என்பதுபோல் பொதுச்சொல். துப்பாக்கி என்பது துபக் என்னும் துருக்கிச் சொல். துமுக்கி என்பது தமிழ்ச்சொல்.

44. காவல்மேல் என்பது வேலைமேல் என்பது போன்றவழக்கு. ஏவல்வினைகள் செய்ய, செய்க என்னும் இருவடிவில் உள்ளன. இவை ஈரெண் பொது. சதளம் என்னும் தொகுதிப் பெயரை ஒருமையாகக்கொண்டு செய் என்னும் ஒருமை வடிவிலும் ஏவலாம். பயிற்சியாசிரியர் வேண்டிய திருத்தமும் செய்து கொள்ளலாம்.

இவரோ தமிழர்!!

புலவர். அரிமதி-தென்னகன்.

[குறிப்பு: தமிழர் திறம்' என்ற ஆசிரியரின் பாடற் கருத்தையொட்டி, தழுவி, சிறுமாற்றத்தோடு பாடியது.]

நாவினில் இனிமை நடமிடப் பேசுவார்
நஞ்சினைப் பெய்து நயமுடன் ஊட்டுவார்!
ஆவிநீர் என்றே அழகுறப் பழகுவார்;
அருந்துயர் வந்துறின் ஆமைபோல் ஒடுங்குவார்!
உடலோ டுடலுற ஒன்ருய்ப் படுப்பார்;
உளத்தினில் சினமுற உண்மையாய்க் கெடுப்பார்!
அன்னையும் அப்பனும் நீரென ஆர்ப்பார்;
புன்மையைக் கடிந்திடின் புலியெனப் பார்ப்பார்!
அருகில் உளரேல் அறிவுரு வென்பார்;
அறியா நிலையினில் அறிவிலி யென்பார்;
தொண்டே என்மனத் துடிப்பெனத் துடிப்பார்;
துயர்சில வருங்கால் வெந்துளம் வெடிப்பார்!
பொருள்வரின் கொள்கையைப் புகையென விடுப்பார்;
புளுகித் திரிந்து புகழ்பெற நடிப்பார்!
பதவிகள் பெறவே பழித்திட அஞ்சார்;
பணம்பெறத் தீமையைப் பரப்பிடும் நெஞ்சார்!
சீச்சீ! இவர்தமை செந்தமிழ் நிலத்து
வாழ்வோர் என்றுநா வாழ்த்துதல் செயுமோ?
சூழ்ந்தெனை யழிக்கச் சூளுரைத் தாலும்
போழ்ந்தென் 'னுடலைப் பொசுக்கிடும் போதும்
புன்மை மனத்துப் புல்லரை என்நா
என்றும் தமிழர் எனச்சொல் லாதே!!

தமிழகத் தமிழ் மாணவர்க்கு அறிவிப்பு.

ஆங்கிலமும் தாய்மொழியும் இந்தியரெல்லார்க்கும் இன்றியமையாதவை யென்றும், தென்னுட்டார் ஆங்கிலத்தை ஒருபோதும் விடாரென்றும், இந்திவெறியர் அறிந்தே இந்தியை மூன்ரும் மொழியாகப் புகுத்த மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வந்தனர்.

தென்னுட்டார் இந்தியை அரசியல் மொழியாகவும் கட்டாய மொழியாகவுங் கற்கவேண்டி யிருக்க, இந்திநாட்டார் தென்னிந்திய மொழிகளுள் ஒன்றைப் பயனற்ற மொழியாகவும் பெயரளவிலுமே கற்கும் நிலைமை யுள்ளது.

மும்மொழித் திட்டம் நடுநிலைமையானதெனின், தாய்மொழி தவிர ஏனையிரண்டும் இந்தியரெல்லார்க்கும் பொது மொழியாகவும், மும்மொழியும் அரசியல் மொழியாகவும் இருத்தல் வேண்டும்.

ஞா. தேவநேயப் பாவாணர்.

தலைவர், உலகத் தமிழ்க் கழகம், தமிழகம்

வயிற்றுக்கடுப்பு நோய்.

-அ. பொன்னம்பலம்.

ஒப்புரவியல் பற்றித் தெளிவான அறிவு நன்கு ஒளிவிட்டு விளங்காத நம் தாயகம் போன்ற ஏழ்மை நாடுகளில் மிகுதியான அளவில் காணப்படும் தொற்றுநோய் வகைகளில் ஒன்று "வயிற்றுக் கடுப்பு நோயாகும்' (Bacillary Dysentery). நோய் தடுப்பு முயற்சிகள் நன்கு மேற்கொள்ளாத கீழைநாடுகளில்தான், மேல்நாடுகளைவிட இந் நோயானது பெருமளவில் பரவியுள்ளது என்பது உலக மருத்துவர் களின் கணிப்பாகும். எனவே இந்நோயின் தன்மைகளைப் பற்றியும், மருத்துவ முறைகளைப் பற்றியும், தடுப்பு முறைகளைப் பற்றியும், தெளிவாகவும் சுருக்கமாகவும் காணுவோம்.

காரணியம்:- (Aetiology): இந் நோயானது, பெரும்பாலும் மலம், தூய்மையற்ற நீர், நன்கு வெப்பப்படுத்தாத பால், பக்குவம் பெறாத உணவுப் பொருட்கள் இவற்றின் மூலமாகப் பரவுகின்றது. ஈக்களானவை, மாந்தனுக்கு இந்நோயைப் பரப்புவதில் பெரும்பங்கு ஏற்கின்றன. இந் நோயினால் பற்றப்பட்ட பிணியாளனின் மலத்தில் புரண்டுவிட்டு, மற்றொரு மாந்தன் உண்ணும் உணவுப் பொருளில் ஈக்கள் மொய்ப்பதன் மூலமாக இந்நோயை மிக எளிதாகப் பரப்புகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து நாட்டில், தூய்மை யற்ற பாலை அந்நாட்டு மக்கள் பருகியதன் விளைவாக பல்லாயிரக் கணக்கான மாந்தர்கள் இந்நோயின் கொடுந்தன்மைக்கு ஆளாகினர். மேலும், ஏரிநீர், குளத்துநீர் போன்ற தூய்மையற்ற நீரைப் பருகும் பழக்கமுடைய சிற்றூர்ப் பகுதிகளில் வாழும் மக்களிடையே இந் நோயானது மிகுதியாக உலவுவதுண்டு. கழிவறைகள் கட்டப்படாத இடங்களில் வாழும் மக்களிடம் இந்நோயானது மிக்க உறவு கொள்வதுண்டு. நம் தாயகம் போன்ற வெப்பநாடுகளில் (Tropics) பொதுவாக மாரிக்காலங்களில்தான் மிகுந்த அளவில் தலைவிரித்தாடுகிறது. நான்கு வகையான நுண்ணுயிர்கள் இந்நோயை ஏற்படுத்துவதற்கு காரணிகளாக உள்ளன; இத்தகைய நுண்ணுயிர்களை அவற்றை ஆராய்ந்தறிந்த மருத்துவத்துறை ஆய்வு வல்லுநர்களின் நினைவாக, நியுகேசில் நுண்ணுயிர்கள் (Newcastle Bacillus), சோனி நுண்ணுயிர்கள் (Sonne Bacillus), சீகா நுண்ணுயிர்கள் (Shiga's Bacillus) பிளக்சினர் நுண்ணுயிர்கள் (Fcexner Bacillus) எனப் பெயரிட்டுள்ளனர்.

நோயின் அறிகுறிகள்:- இந்நோயானது. பொதுவாகத் திடீ ரெனத் தோன்றுவதுதான் மரபாகும். இந்நோயின் அறிகுறிகள் யாவும் பொதுவாகப் பெருங்குடல் (Large Intestine) தொடர்புடை யவாக இருக்கும். பெருங்குடலின் உட்பகுதியில் சூழ்ந்துள்ள கோழைப் படலத்தில் (Mucous Membrane) அழற்சி ஏற்படுவதாலும், நோயின் வன்மை மிகுதியானவுடன், கோழைப் படலக் கண்ணறைகள் மடிந்து விடுவதுண்டு. மலக் குடலிலும் இந் நோயானது தன்னு டைய வன்மையை நிலைநாட்டுவதுண்டு. இந்நோயின் அறிகுறி கள் பலவகையான தன்மைகளுக்கு ஏற்ப மாறுபடும் இயல்புடையன.

(அ) பொதுவான அறிகுறிகள்:- இந்நோயினால் பெரிதும் பற் றப்படும் உறுப்பு பெருங்குடலாகையால், அறிகுறிகள் யாவும் பெருங் குடல் தொடர்புடையவாக இருத்தல் இயல்பு. இந் நோயின் தொடக்க மானது வயிற்றுப் பாகத்தில் "குத்துவலியுடன்" (Colic) ஏற்படும் அடிக்கடி மலம் கழிக்கவேண்டிய நிலை ஏற்படுவதுண்டு. இவ்வாறு மலம் கழிக்குங்காலை மலக்குடல் புறவாயிலில் வலிஏற்படும். உடலின் வெப்ப நிலையானது (Body Temperature) சீர் அளவைவிட மிகுதியாவது உண்டு. மலத்தில் குருதியும், கோழையும் கலந்திருக்கும்; சில சமையங்களில் குருதியின் அளவானது மிகுதியா னால் மலமானது செவ்வணக் குழம்பாகத்தோற்றமளிப்பதுண்டு. குமட் டல் அடிக்கடி ஏற்படும். வயிற்றுப் பாகமானது குழிந்த படகு போன்று காணப்படும். சில நேரங்களில் சிறுநீர் கழிக்கும் பொழுது வலியும் தோன்றுவதுண்டு. நோயின் தொடக்க நிலையில், வயிற்றுப் போக்கின் எண்ணிக்கையானது கணக்கற்று இருப்பதுண்டு; எண் ணிக்கை மிகுதியாக, மிகுதியாக கழிக்கப்படும் மலத்தின் அளவானது குறைவதோடு அல்லாமல், வலியையும் தோற்றுவிக்கும்.

(ஆ) வகைகள்:- வயிற்றுக்கடுப்பு நோயானது, மாந்தனின் உடலில் நிகழ்த்தும் அறிகுறிகளுக்கு ஏற்றவாறு பலவகைகளாகப் பிரிக்கப்படும்.

(1) மென்வகை (Mild Form):- வயிற்றுப்போக்கின் தன்மை யானது சிக்கலற்றதாக இருக்கும். தொடக்க நிலையில் மலமானது மிகவும் நீராகக் கழிவதுண்டு. எண்ணிக்கை மிகுதியாக மிகுதி யாக, கோழையும் கலந்து செல்வது இயல்பு. இத்தன்மையான வயிற்றுக்கடுப்பு நோயில் உடலின் வெப்பநிலையானது சீரளவை விட

மிகுதியாவதில்லை. ஏறத்தாழ இரண்டு நாட்கள்வரை இத்தன்மையான வகை நிலைத்திருப்பதுண்டு.

(2) வன்வகை (Acute Form):- இத்தன்மையான வயிற்றுக் கடுப்பு ஏறத்தாழ இரண்டு முதல் மூன்று கிழமைகள் (வாரங்கள்) நிலைத் திருப்பதுண்டு. வயிற்றுப் பகுதியானது மிகவும் கிழிந்து, படகுபோல் காணப்படும். நாடித்துடிப்பானது (Rapid Pulse) சீர் அளவைவிட (Normal Rate) மிகுதியாவதுண்டு. நாவானது மிகவும் உலர்ந்தும், வெப்பாகவும் தோற்றமளிக்கும். குருதி நச்சுத்தன்மை (Toxemia) பொதிந்து காணப்படும். மலமானது குருதி கலந்து தோற்றமளிக்கும். அடிக்கடி மலம்கழிக்க வேண்டுமென்ற உணர்வும், மலம் கழிக்கும்பொழுது மலக்குடல் புறவாயிலில் வலியும் ஏற்படும். நோய்பற்றிய காலங்களில் உடலின் வெப்பநிலையானது மிகுதியாவதுண்டு.

(3) குமுறும்வகை (Fulminating Form):- இத்தன்மை திடீரெனத்தோன்றுவது வழக்கமாகும். இந்நோயின் தொடக்க நிலையிலே, உடலில் நடுக்கம் தோன்றக்கூடும். குருதி அழுத்த அளவானது (Blood Pressure) சீர் அளவைவிட மிகுதியாகக் குறைவதுண்டு. மலம் கழிக்கும் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. மலம் கரிபோன்று கருவண்ணமாக இருப்பதோடு அல்லாமல் தீநாற்றத்தையும் பரப்பும். தோல் நீலவண்ணமாகத் தோற்றமளிக்கும். இந்நோயின் தொடக்க நிலையிலே குருதியில் நச்சுத்தன்மை மிகுந்திருக்கும்.

நோய்நாடும் முறைகள் (Diagnosis):- "அமிபா" என்ற ஓரறை உயிரினம் ஏற்படுத்தும் (Amoebic Dysentery) வயிற்றுக் கடுப்பு நோயிற்கும், நுண்ணுயிர்கள் ஏற்படுத்தும் வயிற்றுக்கடுப்பு நோயிற்கும் பொதுவான சில அறிகுறிகள் இருப்பதால் மருத்துவர்கள் இந்நோயை முதல்வகையினின்று பிரித்தறிய முயல்வர். 'அமீபா' ஏற்படுத்தும் வயிற்றுக்கடுப்பு நோயிற்கு ஆளாகும் மாந்தர்களின் மலத்தை "நுண்பெருக்காடியின்" மூலமாக ஆராய்ந்தால், அமிபாவின் முட்டைகளை மலத்தில் காணலாம். நுண்ணுயிர்கள் ஏற்படுத்தும் வயிற்றுக்கடுப்பு நோயைத் திண்ணமாக அறிவதற்குச் சிறந்தமுறை செயற்கைப் பதனங்களில் இவற்றை வளர்த்து ஆராய்வதாகும்; பிணியாளனின் மலத்தைக் கோழையுடனும் குருதியுடனும் எடுத்து, "மெக் காங்கி (Mac Conky) பதனங்களில்" செயற்கை முறையில் வளர்த்து,

இத்தகைய நுண்ணுயிர்களை நுண்பெருக்காடியின் மூலம் கண்டறியலாம். மேலும், இந்நோயானது மலக்குடலில் ஏற்படுத்தியிருக்கும் நோய் இயல் மாற்றங்களை (Pathological Changes) நேரிடையாகக் காண "மலக்குடல் ஆய்வு" கருவியைப் (Proctoscope) பயன்படுத்துகின்றனர்.

நோய் தடுப்புமுறைகள்:- இந் நோயைப் பரப்புவதில் முக்கிய பங்கு பெறுபவை ஈக்களாகையால், உணவுப் பண்டங்களை ஈக்கள் மொய்க்காதவாறு தடுத்தல் வேண்டும். ஆற்றுநீர், குட்டைநீர் போன்ற தூய்மையற்ற நீரை நன்கு காய்ச்சாமல் பருகுவதை அகற்றல் வேண்டும். மக்களின் ஒப்புரவியல் பற்றிய அறிவு பெருகவேண்டும்.

மருத்துவ முறைகள்:- நோய்பற்றிய காலங்களில் "கிடக்கை ஒய்வு" (Bedrest) மிகமிக இன்றியமையாததாகும். அடிக்கடி மலம் கழிப்பதால் உடலிலுள்ள நீரின் அளவுகுறையும் எனவே நீரிழப்பை ஈடு செய்வதற்காகச் சருக்கரையை (Glucose) உப்புநீருடன் (Sauni) கலந்து சிரைகளின வழியாகப் பிணியாளனின் உடலில் ஏற்றுவர்.

நோய்பற்றிய காலங்களில் பிணியாளனுக்கு, அரிசிக்கஞ்சி, எலுமிச்சம்பழச்சாறு, போன்ற நீர்ம வடிவ உணவுப்பொருள்களை இரண்டு மணிக்கு ஒருமுறை சிறிது சிறிதாக அளிக்கவேண்டும் 'சல்பாடைசின்' (Sulphadiazine) என்ற குளிகையை மருத்துவர்கள் பிணியாளனின் உடலின் எடைக்கு ஏற்றவாறு கணக்கிட்டுத் தருவார்கள்; இத்தகைய மருந்தை மூன்று நாட்கள்வரை உட்கொள்ள வேண்டும். இந்நோயிற்குச் சிறந்த மற்றொரு மருந்து "குளோரோமைசின்" (Cholromycetin) ஆகும். O

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க்கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா
தனிஇதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தொல்காப்பியச் சொல்லாராய்ச்சி

"வில்லவதரையன்"

(1) மா.

உபமா என்ற சொல்லின் வேர்ச்சொல் யாது?

1. உபமா என்ற சொல்லின் வேர்ச்சொல் யாது என்பதை ஆராய்தலே இக் கட்டுரையின் நோக்கமாகும். உபமா என்ற சொல் சாலப் பழமையான வேதங்களிலும், போற்றத் தகுந்த பாணினி முனிவர் இயற்றிய இலக்கண நூலாகிய பாணினியத்திலும் பிறபண்டைய இலக்கியங்களிலும் பிற்கால அணியிலக்கண நூல்களிலும் உலகவழக்கிலும் காணப்படுவதாகும். இவ்வாற்றால் இஃதொரு பழமையான சொல் என்பதை யாவரும் உணர்வர். பாணினி அணியென்று ஓர் இலக்கணம் வகுத்துக் கூறினர் அல்லர்; இச் சொல்லை அணிக்குப் பெயராகவும் வழங்கினர் அல்லர்.

2. உபமா, உபமானம், உபமேயம், இவ, என்று அவர் வழங்கிய சொற்களைப் பிற்காலப்புலவர் அணியின் பெயராகவும் அணிக்கு உறுப்பாகவும் வழங்கினர்.

3. உபமா என்ற சொல் பெயர்ச்சொல் ஆகும். உப என்றும் மா என்றும் பிரிக்கும் இயல்புடைய ஒரு தொடர் மொழியும் ஆகும். உபமா என்ற இத் தொடர் மொழியே ஓர் அணியை உணர்த்துகின்றது. உப என்ற சொல்லையும், உபமானம், உபமேயம் என்ற சொற்களையும் இவ என்ற உவம உருபையும் இனி ஆராய்தல் வேண்டும்.

4. உப என்பது 'உபசர்க்கம்' என்ற பெயருடைய ஒரு சொல்லாகும். சர்க்கம் என்பது ஒரு பெயர்ச்சொல் ஆகும். உப என்பதற்கு அருகில் என்பது பொருள். சர்க்கம் என்பதற்குப் படைத்தல் என்பது பொருள். உபசர்க்கங்கள் பலவுள்ளன. பலவும் பல பொருள் உடையன. இவை யாவும் "அவ்யயங்கள்" என்று பெயர் பெறும். இவை தொழிற்பெயர் முதனிலைகளுக்கு முன்வந்து அவற்றின் பொருளைச் சிறப்பித்தும் வேறுபடுத்தியும் இவ் விரண்டுமின்றியும் நிற்கும். ஒரு தொழிற்பெயர் முதனிலை முன் பல உபசர்க்கங்கள் வந்து அதற்குரிய பொருளை மாற்றிப் பல பொருள் தந்து நிற்கும்.

5. மா என்பது ஒரு தொழிற் பெயரின் முதனிலையாகும். அளவு என்ற பொருளுடையது. பாணினி தாமியற்றிய பாணினீயத்தில் 1943 தொழிற்பெயர் முதனிலைகளைக் கூறியுள்ளார். தொழிற் பெயர் பெறும் தாதுக்கள் சொற்களின் பிறப்பிடமாகும்.

6. பாணினி, அவருக்கு முற்பட்ட புலவர் கூறியவாறே தொழிற் பெயர் முதனிலைகள் அனைத்தையும் அவையடையும் வேறுபாடு கருதிப் பத்துக் கணங்களாக (கூட்டம்) வகுத்து ஒவ்வொன்றிற்கும் உரிய பொருளையும் கூறியுள்ளார். தொழிற் பெயர் முதனிலைகளிலிருந்து பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் பிறக்கின்றன. பெயர்ச் சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏற்றுவரும், வினைச்சொற்கள் இறுதிநிலைகளை ஏற்றுக் காலம் உணர்த்தி வரும் ஆசிரியர் தொழிற் பெயர் முதனிலைகளுக்கு என்ன பொருள் கூறினரோ அப்பொருளையே பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் உணர்த்திவரும். தொழிற் பெயராக இருக்கும்போதே உபசர்க்கங்கள் அவற்றின் முன்வந்து பொருளை வேறுபடுத்திவிடும். அதனால் தொழிற் பெயர் அடியாகப் பிறந்த பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் தமக்குரிய பொருளை உணர்த்தாது வேறு வேறு பொருளை உணர்த்திவரும்.

7. இவ்வாராய்ச்சிக்குரிய தொழிற்பெயர் முதனிலைகள் நான்காகும். (1) மா (2) மாங் (3) மாண (4) மான என்பனவாம். இவ என்ற உவம உருபுமாகும். (1) மா-மானே என்றும் (2) மாங்-மானேசப்தேச என்றும் (3) மான-பூசாயாம் என்றும் (4) மான-தம்பே என்றும் முதனிலையையும் பொருளையும் கூறியுள்ளார்.

8. மானே—அளவு என்ற பொருளில், மா—மா என்ற சொல், வழங்கும். (2) மானே அளவு என்ற பொருளிலும், சப்தேச-ஓசை என்ற பொருளிலும், மாங்—மாங் என்ற சொல் வழங்கும். (3) பூசாயாம்-போற்றுதல் என்ற பொருளில் மான—மான என்ற சொல் வழங்கும், (4) தம்பே—தூண் என்ற பொருளில் மான-மான என்ற சொல் வழங்கும். தம்பே என்ற சொற்கு தூண் என்ற நேர்ப்பொருள் கொள்ளாமல் அகங்காரம் (செருக்கு) என்று பொருள் கொள்ளல் வேண்டும். (2) மாங் என்பதில் உள்ள ஈற்று ஙகர மெய்யும், (3) மான (4) மான என்பவற்றில் உள்ள ஈற்று அகரவுயிரும் இத்துக்கள் என்று பெயர் பெறும். இவையும் அவ்பங்களாகும். இவை, முதனிலைகள் பெயர்ச் சொற்களாகும் போதும் வினைச்சொற்களாகும் போதும் அவற்றை

விட்டு நீங்கும். இவை ஒவ்வொன்றும் இலக்கணக் குறிப்புடையன. ஆகவே (1) மா (2)-மா (3) மான் (4) மான் என்பன முதனிலைகளாகும்,

9. பாணினீய நூற்பாவால் பொருளும் இலக்கணமும் பெறாத சொற்களுக்கு வரருசி என்ற வார்த்திகக்காரர், பல நூற்பாக்களை யியற்றிப் பொருளும் இலக்கணமும் கூறி, அதில் சேர்த்துள்ளார். வரருசி இயற்றிய நூற்பாக்களுக்கு வார்த்திகம் என்று பெயர். அவர் சிஞாசாயாம் மானே—சிஞாசாயாம் அறிதலில் விருப்பம் என்ற பொருளில், மானே—மானே என்ற சொல்வரும் என்று கூறியுள்ளார். மானே விசாரே—விசாரே—ஆராய்தல் என்ற பொருளில் மானே—மான என்ற சொல் வரும் என்று பாணினீயத்தின் பழைய உரைகாரரான காசிகா விருத்திகாரர் கூறியுள்ளார்.

10. மா என்ற சொல் முன் உப என்ற 'உபசர்க்கம்' வந்து உபமா என்றாகி, இயல்பாக உள்ள அளவு என்ற பொருளை உணர்த்தாது, ஒப்பு என்ற பொருளை உணர்த்திற்று. பெயர்ச் சொல் ஆதற்குரிய இறுதிநிலை முதலியவற்றோடு புணர்ந்து அவை கெட்டு உபமா என்ற வந்துளது மா என்ற முதனிலை அடியாகவே உபமா—உபமானம் உபமேயம் என்ற சொற்கள் பிறந்துள்ளன. (2) மாங் என்ற முதனிலையாக அளவு-ஒலி என்ற பொருள் தரும் சொற்கள் தோன்றும். மா என்ற சொல்வில் அளவு என்று பொருள் தரும் சொல் போலவே—மாங் என்றதின் அடியாகப் பிறந்த சொல்லும் பொருள் தரும். ஆனால் இரண்டிற்கும் வேற்றுமை என்னையெனின் மா என்ற சொல்லடியாகப் பிறந்த வினை முற்று பரச்மைபதமாகத்தான் வரும். மாங் என்ற சொல்லடியாகப் பிறந்த வினை முற்று ஆத்மனேபதமாகத்தான் வரும். இந்த வேறுபாட்டை உணர்த்தவே ஈற்றில் ஙகரமெய் வந்தது. பரச்மைபதம் என்றால் பிறர் பயனுறச் செய்யும் வினை என்பது பொருள். ஆத்மனேபதம் என்றால் தான் பயனுறச் செய்யும் வினை என்பது பொருள். மா என்பது ஒலி என்ற பொருளில் வரும்போது மக்கள் பேச்சைக்குறித்து வருவதில்லை. விலங்கின் ஒலியைக் குறித்து வரும். மான என்பதற்குப் போற்றுதல் என்று பொருள் கொள்வதும் மான என்பதற்கு அகங்காரம் (செருக்கு) என்று பொருள் கொள்வதும் மான என்பதற்கு அறிதலில் விருப்பம் என்று பொருள் கொள்வதும் மான என்பதற்கு ஆராய்தல் என்று பொருள் கொள்வதும் கருத்துப் பொருளே அன்றி நேர் பொருள் அன்று.

11. மா என்பதற்கு ஒலி என்ற பொருள் கொள்ளும் போது (மீமயத்கெள:) 'கத்துகின்ற பசுவைக் கொண்டுவா; வேள்வி செய்தற் பொருட்டு' என்பது ஒரு சொற்றொடர். இத்தொடர் நிருத்தத்தில் காணப்படுகிறது. இறந்துபோனதைக் கொண்டுவராதே. கத்துகின்ற உயிரோடுள்ள பசுவைக் கொண்டுவா என்பது பொருள். கத்துவதாலும், கத்தாமையாலும் உயிருண்மையும் உயிரின்மையும் அளந்தறிதலால் மா ஓசையைக் குறிப்பதாயிற்று. கொன்றே வேள்வி செய்கிறார்கள். உயிரோடு வேள்வியில் இடுவதில்லை ஆதலால் இறந்ததைக் கொண்டு வேள்வி செய்யலாம் என்று கொண்டுவந்து விட்டால் என்ன செய்வதென்று அவ்வாறு கூறியிருக்கலாம் என்று எண்ண வேண்டியுளது.

12 மா என்ற சொல்லடியாக உபமா—உப மானம் உபமேயம் என்ற சொற்கள் தோன்றியுள்ளன, மாங் என்ற சொல்லடியாக அளவு—ஒலி முதலிய பொருளை உணர்த்தி ஆத்மனேபதம் வந்துள்ளன—மற்ற இரண்டு முதனிலைகளாலும் போற்றுதல், செருக்கு என்ற பொருளில் பல சொற்கள் தோன்றியுள்ளன. இந் நான்கு முதனிலைகளினடியாகத் தோன்றிய பல சொற்களை உபசர்க்கத்தால் வேறுபட்ட பொருளுடையவற்றைக் கீழே குறிப்பிடுகின்றேன். காண்க.

மா—அளவு பெயர்ச்சொல்

மா—அளவு ஓசை—மீமயத்—ஒலிக்கின்ற

உபமா—ஒப்பு

உபமாதி—அளக்கிறான்

சாமாதா—மாப்பிள்ளை (மனைவியை அளக்கிறான்)

பிரமாணம்—மேற்கோள்

பரிமாணம்—சுற்றளவு

உன்மானம்—நிறுத்தல் அளவு

அநுமானம்—கருதலளவை

நிர்மாணம்—படைத்தல்

மாதா—இவளிடத்தில் கரு அளக்கப்படுகிறது.

மீமாம்சா—ஒரு நூல்—ஆராய்தல்—பிரதிமா—வடிவம்

அமா–அமாவாசை (பதினன்கிற்குமேல் அளக்க முடியாது) பதினைந்தாம் நாள் அமாவாசை,

பூர்ணிமா–பருவம் (பதினன்குநாள் நிறையின் பருவம் என்பது பொருள்) விரிக்கிற் பெருகும் என்பதால் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

13. தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தின்கண்ணும் பிற பண்டைய இலக்கியங்களிலும் மா என்ற சொல்லும் அதனடியாகப் பிறந்த சொற்களும் காணப்படுகின்றன. ஆசிரியர் தொல்காப்பியத்தில் மா என்ற சொல்லை ஓரெழுத்தொருமொழியாகவும் பல பொருளொரு சொல்லாகவும் வழங்கியுள்ளார். அச்சொல்லிற்கு இலக்கணம் கூறுமிடத்துப் பொருள் மயக்கம் உண்டாகாமல் இருக்கும் பொருட்டுப் பல இடங்களில் இன்ன இன்ன பொருளுடையன என்றும் கூறியுள்ளார். மா என்பதைத் தனித்தனியாகவும்.சாரியை சேர்த்தும் இறுதிநிலை சேர்த்தும் தொடர்மொழிப்படுத்தியும் அடைமொழி புணர்த்தும் கூறியுள்ளார். மேலும் மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொற்களையும் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் கீழ் வருவனவற்றால் தெளிக.

1. மா–அளவு 'வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்' தொல். நூற்பா 48.

2. மா–விலங்கின் பொதுப் பெயர்–'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை' தொல். நூ 964.

3. மா–மாமரம்
மா-விலங்கு-'மாமரக்கிளவியும் ஆவும்மாவும்' தொல் நூ-231

4. மா – பெருமை – 'மாபெருந்தானையர் மலைந்த பூவும்' தொல்–நூ–1006.

5. மா–விலங்கு–மா,னகரச்சாரியை பெற்று வரும்.

மான் – விலங்கு – 'னகரம் ஒற்றும் ஆவும் மாவும்'– தொல். நூ–231.

6. மா–புதுமை.–'மாக்கலன்–புதிய மட்பாண்டம்'
'புறநீர் மாக்கலன் அறிவாயிடை' தொல் நூ-1064.

7. மா–குதிரை–,மடல் மா கூறும் இடனுமாருண்டே'
'புள்ளியற்கலிமா உடைமையான' தொல். நூ–1048, 1040.

8. மா-பறவை
மா-விலங்கு } மா-ஈண்டு இரு பொருளில் வந்தது.

'மாவும் மாக்களும் ஐயறிவினவே'-
தொல். நூ-1551.

9. மா-இசை நிறைத்துவரும் அசைச் சொல்-'மாவென் கிளவி வியங்கோளசைச்சொல்: தொல். நூ-758.

10. மாக்கள்-மக்கள்-மாக்கள் என்ற சொல் மா அடியாகப் பிறந்தது.

'மாவும் மாக்களும் ஐயறிவினவே'
தொல். நூ-1531.

11. கோமான்-அரசன்

மான்-ஆண்பால் இறுதி நிலைமுன் மா என்ற சொல்லைச் சேர்த்து மான் பெருமையுடையவன் என்று குறிப்பதோடு, கோ-தலைமையையும் உடையவன் என்று குறிக்கக்கோமான் என்று வழங்கியுள்ளார். சேரமான், அதியமான் தொண்டைமான் என் பனவற்றாலும் அறிக.

'வென்ற கோமான் முன்றேர்க்குரவையும்' தொல். நூ-1022.

12. மாதர்-காதல். மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொல். மாதர்-பெண். ஆகுபெயராய்ப் பெண்ணையும் உணர்த்தும். மாதர் காதல். தொல். நூ-811.
'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெரிஞ்சிப்பழம்'-குறள்-1120.

13. மாயோன்-திருமால்-கரியவன்
மாயோன்-கொற்றவை-கரியவன் } கருமையடியாகப் பிறந்த சொற்கள்

மாயோன் மேய காடுறை
உலகமும், தொல். 951.

14. மாலை-மாலைக்காலம். கதிரவன் தோன்றி 30 நாழிகைக்குமேல் 40 நாழிகை முடியும்வரை உள்ள சிறுபொழுது இருட்காலம் ஆகும். கருமை என்ற பெயருடைய சொல்லடியாகப் பிறந்த சொல். இருள் கருமை நிறம்.

'காரும் மாலையும் முல்லை'-தொல். நூ-952.

15. மாயம்-பொய்-மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொல். மா-கருமை
அளந்தறிந்தவிடத்து குற்றமாதல்.
'வந்த கிழவனை மாயம் செப்பி'
'மாயப்பரத்தை உள்ளிய வழியும்'-தொல். நூ-1060,1093.

16. மான-உவமவுருபு-மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொல். உவமையும் பொருளும் ஒத்திருத்தலை அளந்தறிதல்-தமிழில் உவம உருபாகவுள்ள மா என்ற சொல்லுடன்-உப என்ற உபசர்க்கம் சேர்த்து உபமானம் என்று வழங்கி, அளக்கும் பொருளுக்குப் பெயராக ஆரியமொழியில் வழங்கியுள்ளனர்.

17. மானம்-உயர்ந்த பண்பு. மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொல். மானமாவது எஞ்ஞான்றும் தன்னிலைமையிற்றிழாமையும் ஊழ்வினையால் தாழ்வு வந்துழி உயிர் வாழமையும் ஆம் என்பர். பரிமேலழகர் மேலும் இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூல் முறைமையை மறுத்து உடம்பினது நிலையின்மையும், மானத்தினது நிலையுடைமையும் தூக்கிக் குடிபிறப்புத் தாழவரும் செயல் ஒழிக என்றார்.
'புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தல்' தொல். நூ-987.

18. மானம்-குற்றம்-மா-கருமை-மா என்ற சொல்லடியாகப்பிறந்த சொல். அளந்து குற்றம் காண்டல்.
'இன்னிடைவரினும் மானம் இல்லை'-தொல். நூ-271.

19. மாந்தர்-மக்கள். மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொல். உயர்ந்த சால்பினை அளந்தறிந்து மிக உயர்ந்தோர் என்று பொருள் கொண்டனர். சான்றோர்-கல்வி அறிவு ஒழுக்கங்களால் நிறைந்தவர். 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்பதனாலும் அறிக.

இக்கருத்தைக் 'கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும், உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின், நன்னயப்பொருள்கோள் எண்ணருங் குரைத்தே' என்ற தொல். 1221 நூற்பாவாலும் அறியலாம்.

உயிரில் பொருளேயும் உயிர்ப்பொருளேயும் அளந்தறிந்து உயிர்ப்பொருளை ஒன்றுமுதல் ஐந்தறிவுடையனவாக அளந்தறிந்து அதன்மேல் ஆறறிவுடையோரை மாந்தர் என்றார்.

'மக்கள் தாமே ஆறறிவுயிரே'
'மாந்தர் மக்கள் என்னும் பெயரும்' தொல். நூ-1532, 648.

20. மாராயம்–அரசராற் பெறும் சிறப்புப்பெயர். பெருமை என்ற பொருளுடைய மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொல்.
'மாராயம் பெற்ற நெடுமொழியானும்'–தொல். நூ-1009.

21. மாத்திரை–கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப்பொழுதும் ஒரு மாத்திரையாகும். இப்பொருள் மாத்திரை என்ற சொல்லில் அமைந்துள்ளதா என்று ஆராய்ந்தால் அமைந்துளதை அறியலாம். கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும் மிகச் சுருங்கிய கால எல்லேயைக் குறிக்கின்றன. மாத்திரை என்ற சொல்லிலும் அமைந்துளது. மா என்றால் அளவு என்றுதான் பொருள் தரும்; நுண்ணிய காலத்தை உணர்த்தாது. அளவின் நுண்ணிய காலத்தைக் குறிக்கவே திரை என்ற சொல்லேச் சேர்த்து மாத்திரை என்றார்–மா–அளவு–திரை–சுருக்கம். மாத்திரை–அளவின் சுருக்கம். திரை–சுருக்கம் என்ற பொருள் தரும் என்பதை, நரை திரை மூப்பு, கடல் திரை, வைக்கோல்திரை, வெற்றிலேயை உணர்த்தும் திரையல் என்பனவற்றால் உணர்க. நாடகத்தில் கட்டிய திரையை யாவரும் அறிவர். அஃது அகன்று பரந்து நீண்டு ஓவியம் வரையப் பெற்றிருக்கும். அதனை வேண்டாத போது சுருங்கும்படியாகத் திரைத்தலால் திரை (சுருக்கல்) என்று பெயர் பெற்றது. ஆகவே, திரை–சுருக்கம் என்ற பொருளுடையது. மாத்திரை அளவின் சுருக்கம் என்று பொருள். மேலும் ஆசிரியரே நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே என்றதனாலும் உணர்க. ஒன்றில் குறைந்த எண்ணில் மா–1/20 அரைமா–1/40 இவ்வாறு கூறியது மேல்மாவாகும். ஒருமா–1/6400, அரைமா–1/12,800–இவ்வாறு கூறியது கீழ்மாவாகும். மா என்பதற்குப் பொருள் கூறப்பட்டுள்ளதால் மா என்று தனித்

துச் சொன்னால் என்ன என்று பொருள் கொள்வது? மயக்கம்தீர மாத்திரை என்றார் ஆசிரியர். ஆரியமொழியில் மா என்ற அளவைக் குறிக்குஞ் சொல் திரச் என்ற பிரத்யயம் வந்து மாத்திரா என்று ஆகும் என்பர். அச்சொல் திரிந்ததுதான் தமிழில் உள்ள மாத்திரை என்பர் ஆரியர். அறியாதார் அங்ஙனமே உடன்படுவர். மாத்ரா என்ற சொல் திரிந்த சொல் அன்று என்பதைத் தெளிவாக உணர்க.

'கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை'

'நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே'-தொல். நூ-7.

14, ஆசிரியர் தொல்காப்பியர் வழங்கிய ஓரெழுத்தொரு மொழி.

1. மா-அளவு 2, மா-விலங்கின் பொதுப்பெயர் 3. மா--மாமரம் 4. மா-பெருமை 5. மா-குதிரை 6. மா-புதுமை 7. மா-பறவை 8. மா-இசை நிறைத்துவரும் அசைச்சொல்.

15. ஆசிரியர் தொல்காப்பியர் வழங்கிய மா என்ற சொல்லடியாகப் பிறந்த சொற்கள்.

1. கோமான்-அரசன். மான்-பெருமையுடையவன்
2. மாதர்-காதல் (மாதர்-பெண்) சிறப்புடையது.
3. மாயோன்-கருமைநிறம் உடையவன். திருமால்
4. மாலை-மாலைக்காலம்-மா-கருமை. இருட்காலம்
5. மாயம்-பொய்
6. மானம்-உவம உருபு
7. மானம்-சிறந்த பண்பு
8, மானம்-குற்றம்
9. மாந்தர்-உயர்ந்தோர்
10. மாராயம்-அரசரால் பெறும் சிறப்புப் பெயர்
11. மாத்திரை-அளவின் சுருக்கம்

பிற ஆசிரியர் வழங்கிய சொற்கள்,

1, அரிமா-மடங்கல்- "அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்" பட்டினப்பாலை அடி. :298.

2. மா-மாவு-அரிசிமாவு-கடலைமாவு முதலியன.

"கொழுங்கொடிக்கவலை, வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும், மா இருந்து, விழுமிதின் வீழ்ந்தன" மா-இருந்து-முற்றி மாவாந்தன்மை தம்மிடத்தே உளவாய்"- மலைபடுகடாம்-அடி.126

புறம்

1. மா-திருமகள் "மாமறுத்தமலர் மார்பு" புறம்-செய்-7.

2. மா-விலங்கின் வடிவாகப் பிறப்பது (எண் பேரெச்சம்) "மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு" புறம்-செய்-28.

3. மா-அளவு-நூறு குழி நில அளவு. "மாநிறை வில்லதும் பனுட்காகும்" புறம்-செய்-147.

4. மா-மாமைநிறம்-சிறந்த நிறம் "அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை" புறம்-செய்-147.

5. மா-கருமை, மாக்கடல்-கரிய கடல். "மாக்கடல் நிவந்தெழுதரும்" புறம்-செய்-4.

6. மா-அன்னப்பறவை. "மடநடைமாயினம்" கலித்தொகை. 92.

7. மாவன், புலிகடிமால்-குறுநில மன்னர்-பெருமையுடையவன் என்பது பொருள்.

மையற் கோமான் மாவனும்-புறம்-71.
'ஒலியற்கண்ணிப் புலிகடிமால்'-புறம்-202.

8 மானி-பாண்டிமாதேவி-பெருமையுடையவள். "வரிவளைக்கைம்மடமானி" தேவாரம்.

9. மாமன்-மாமி-அம்மான் — அம்மாமி — அம்மான்சேய்-இவை யாவும் மா என்றதன் அடியாகப்பிறந்தன. கீழ்வாய் இலக்கம். (மா-) ஒருமா-1/20. அரைமா. 1/40. இவையிரண்டும் மேல்மா. ஒருமா-1/6400. அரைமா-1/12800. இவை இரண்டும் ஒன்றில் குறைந்த கீழ்மா.

இம்மி என்றும் அளவு கண்டவன் தமிழன்.

16. ஆரிய மொழியில் மா என்ற சொல் அளவு, ஓசை போற்றல், செருக்கு என்ற பொருளில் வழங்கியவாறே தமிழ் மொழியிலும் எழுத்தாலும் ஒலியாலும் பொருளாலும் வேறுபடாத மா என்ற சொல்லை வழங்கியுள்ளனர். மா என்ற சொல்லை இரு மொழிக்கும் பொதுவான சொல் என்று சொல்ல இயலுமா? இய லாது. இரு மொழிகளில் எம்மொழியிலிருந்து எம் மொழிக்குச் சென்றது என்பதை ஆராய்தல் வேண்டும்.

தொல்காப்பியத்தில் மூன்று அளவையும் அவற்றின் பெய ரையும் கூறியுள்ளார். அளவுப் பெயர் நிறைப்பெயர் எண்ணுப் பெயர்—என்பன. அளவுக்கும் நிறைக்கும் க ச த ப ந ம வ என்ற ஏழு மெய்யெழுத்தினையும் அ, உ என்ற இரண்டு உயி ரெழுத்தினையும் மொழிக்கு முதலில் வரும் என்று கூறியுள்ளார். மூன்று பெயர்க்கும், மொழிக்கு ஈற்றில் வரும் எல்லா எழுத்தும் ஈற்றில் வரும் என்றும் கூறியுள்ளார்.

'அளவிற்கும் நிறைக்கும் மொழிமுதலாகி
உளவெனப்பட்ட ஒன்பதிற்றெழுத்தே
க்சதப என்ரு நமவ என்ரு
அகர உகரமோ டவையென மொழிப"
'உயிரும் புள்ளியும் இறுதியாகி
அளவும் எண்ணும் சுட்டி
உளவெனப்பட்ட எல்லாச் சொல்லும்'

—தொல். 170, 164. இந்நூற் பாக்களால் அறிக.

சொற்கள் புணரும் இலக்கணப் பயன்கருதி கூறியுள்ளார் என்ப தைத் தொல்காப்பியம் கற்றோர் அறிவர். மா என்ற சொல் மகர மெய் முதலாகவும் ஆகார ஈறு இறுதியாகவும் வந்த சொல்லா கும். மா-என்ற சொற்கு ஆசிரியர் கூறிய பொருளையும் இலக் கணத்தையும் நோக்கும்போது தமிழ்ச்சொல்லே என்பதை யாவ ரும் உணர்வர்; ஆரியச் சொல் அன்று. பிறமொழிச் சொற்குப் பொருளும் இலக்கணமும் யாண்டும் கூறவில்லை என்பதையும் எண்ணி உணர்தல் வேண்டும். ஆகவே தமிழ் மொழியிலிருந்து தான் ஆரிய மொழிக்கு மா என்ற சொல் சென்றிருக்கிறது என் பதைத் துணிந்துணர்க. மேலும் மா என்ற சொற்கு இத்தகைய இலக்கணங்கள் ஒன்றும் ஆரிய மொழியில் கூறப்படவில்லை என்பதையும் உணர்க.

1. மா என்ற தமிழ்ச்சொல்முன் உப என்ற உபசர்க்கம் சேர்த்து உபமா என்று வழங்கினர். ஒப்பிடல் என்பது பொருள்– ஆகவே மா என்ற தமிழ்ச் சொல்லடியாகப் பிறந்தனவே உபமா உபமானம் உபமேயம் என்பன.

2. மா–ஓசை என்ற பொருளுடைய சொல். மா என்று ஆடு மாடு கத்துவதைக் கொண்டு அவ்வொலியுடைய ஆடு மாடுகளைக் குறித்ததாகக் கொள்ளலாம். காகம் இரு மொழியிலும் ஒலியாற் பெற்ற பெயர்.

3. மான என்பது போற்றுதல் என்று வழங்கும் சொல். மானம் என்று வழங்கும் தமிழ்ச் சொல் அடியாகப் பிறந்த சொல்லாகும்.

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்'– என்ற குறளாலும்
'இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு'– என்ற குறளாலும்

சேரமான் கணைக்காலிரும் பொறை வரலாற்றாலும், மானம் என்பதற்குப் பரிமேலழகர் எழுதிய பொருளாலும் குறிப்பாலும் மானம் என்ற சொல்லின் பொருள் நன்குணரலாம். ஆகவே மானம் என்ற தமிழ்ச்சொல் ஆரியமொழியில் சென்றுள்ளது என்று கொள்க.

மானம்—அகங்காரம் (செருக்கு) என்ற பொருளுடைய சொல். மானம்—குற்றம் என்ற பொருளுடைய தமிழ்ச்சொல். ஆரிய மொழியிற் சென்றுள்ளது.

'யான் எனது என்னும் செருக்கறுப்பான்வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்'

என்ற குறளாலும், செருக்கு என்பதற்கு இறுமாப்பு என்று பொருள் கொள்வதாலும் அறியலாம். இறுமாப்பு, செம்மாப்பு என்பவற்றில் உள்ள மா என்றதனாலும் உணரலாம். ஆராய்தல், அறிதலில் விருப்பம் என்பவற்றையும் கருத்துப் பொருளாகக் கொள்க. இவ என்ற உவமஉருபு ஆரியமொழியில் மிகவும் வழங்குவதாகும். இவர்தல் என்பதற்குப் படர்தல், செல்லல், விரும்பல், மேலேறுதல் என்று பொருள். உவமை பொருள் என்ற இரண்டிலும், பொதுத்தன்மை சேறலால் இவர் என்ற சொல்லை வழங்கியுள்ளனர். இவர் என்ற சொல்லின் ரகர மெய்யைக் குறித்து இவ என்று ஆரியர் வழங்கியுள்ளனர். புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் 285–ஆம் செய்யுளில் 'அரும்பிவர் மென்முலை தொத்தா' என்ற அடியில் இவர் என்பதை உவம உருபாக வழங்கியுள்ளனர். இவர் என்ற சொல்லும் தமிழ்ச்

சொல்லேயாகும். ஆரிய மொழியில் சென்றுள்ளது. உபமா என்பதில் உப என்பது ஆரியச் சார்புடையது. மா என்பது தமிழ்ச் சார்புடையது என்பதை உணர்க. ஆகவே உபமா என்ற சொல்லின் வேர்ச்சொல் தமிழ்ச் சொல்லே என்பதை ஆராய்ந்து தெளிக. கடாட்சம் என்பதும் உபமா போன்ற ஒரு தொடர்மொழி ஆகும். கடை + அட்சம், கடாட்சம் கட = கடை, அட்சம் = கடைக்கண் என்பது பொருள். கடை தமிழ்ச் சார்புடையது. அட்சம் ஆரியச் சார்புடையது. இதனாலும் உபமா என்ற சொற்றொடரை உணர்க. O

மனம்.

மக்களின் மனமானது, அவர் உணர்ந்தும் உணராமலுந் தம்முன் முற்றையோரின் இயல்புகளை ஏற்குந்தன்மை வாய்ந்ததாயிருக்கின்றது. ஒருவரோடு அடுத்தடுத்துப் பழகும் மற்றொருவர் அவர் பேசுவது போலவும், பார்ப்பது போலவுந் தலையசைப்பது போலவுங், கைகாட்டுவது போலவும், முகஞ் சுளிப்பது போலவும், இசைபாடுவது போலவும் எல்லாந் தாமுந் தம்மை யறியாமலே ஒருவர்க்கு மற்றொருவரின் பழக்கங்கள் ஏறுவதை உற்றுணர்ந்து பார்த்தால், ஒருவர்க்குப் பிறர் ஒருவரின் இழிந்த செயல்கள் எளிதில் ஏறுவது போல உயர்ந்தவை ஏறுவதில்லை. இழிந்தோருடன் பழகுவோர் அவர்தம் உயர்ந்த செயல்களைக் கற்றுக்கொள்வதில்லை. சிறுவர் சிறுமியரைக் கீழ் மக்களுடன் பழக விட்டால் அவரிடத்துக் காணப்படும் அருவருப்பான செயல்களையெல்லாஞ் சில நாட்களில் எளிதிலே தாமுஞ்செய்யப் பழகிவிடுகிறார்கள். அங்ஙனமே உயர்ந்தோருடன் அவர்களை எத்தனைக் காலந்தான் பழக விட்டாலும் அவர்கள் அவர்தம் உயர்ந்த முறைகளைக் கற்று நடப்பது அரிதினும் அரிதாகின்றது. இவ்வாறு மக்களியற்கையானது இழிந்தவற்றை நாடுவதில் எளிதாகச் செல்லுதலால் எத்துணை உயர்ந்தோர்க்குங் கீழ் மக்களின் சேர்க்கை சிறிதும் ஆகாது. கயவரின் இழிந்த செயல்கள் தம்முட் புகாமல் தடைசெய்து நிற்குஞ் சான்றோர் மனமும் ஒரோஒருகால் தன்னை அறியாமலே அவை நுழைவதற்கு இடங் கொடுத்துவிடும்.

-மறைமலையடிகள்.

மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை, பக்கம்-14.

வள்ளுவர் காலம்.

எம். எசு. அமீது.

நீல்மேலாந் தழைத்தோங்கிட நல்வழி காட்டிய செந்நாப் போதார் வாழ்ந்து வள்நிறை கருத்துக் கருவூலமாம் குறளினை யாத்தது கடைக்கழகக் காலத்தின் இறுதியிலேயேயாம். எந்நாட்டவரும்-எச்சமயத்தினரும் ஒப்பும் வண்ணம் என்றும் நிலைபெற்றோங்கும் கருத்தினையமைத்து வள்ளுவனார் செய்தருளிய குறளினைப் பேணிக்காத்தல் தமிழ்ப் பெருமக்களின் தலையாய கடமையன்றோ?

வள்ளுவர் கடைக்கழகக் காலத்தினர். இக்கழகம் கி. மு. 1715 முதல் கி. பி. 235 வரை நடைபெற்றுள்ளதாக அறியப்படுகிறது. செந்நாப்போதாரின் முழு வரலாறு இற்றைக்கு இல்லை. எனவே கண்டவர் கண்டபடி சொன்னவை கேட்டுத் தமிழகம் முடிவுகாண இயலாமல் நிற்கிறது. தென்னகத்தின் பல்வேறு பாகங்களில் உள்ள ஆய்வாளர்கள் வள்ளுவர் பற்றியும்-அவர் காலம் பற்றியும் பலவாறாகக் கூறியுள்ளனர். எனினும் அவற்றுள் காலஞ்சென்ற பேராசிரியர் எசு. வையாபுரி அவர்களின் ஆய்வுரைகள் மட்டும் தலைமாறாக உள்ளன.

திரு. வையாபுரி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும் (1936–'46) திருவிதாங்கூர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும் (1951) இருந்தவராவார். இவரின் வள்ளுவர் பற்றிய இவ்வாய்வினைத் தமிழ்ச் சுடர்மணிகள் என்ற நூலில் காணலாம்.

இவரின் இறுதி நூலான History of Tamil Language and Literature என்பது நாட்டில் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது. இதனைப் படித்த உருசிய மக்கள் தமிழ்பற்றியும்-தமிழரைப் பற்றியும் தவறான எண்ணங் கொண்டனராம்.

பொதுவாக வையாபுரியார் மதுரைத் தமிழ்க் கழகத்தை நிறுவியவர் சமணரென்றும், தொல்காப்பியர் காலம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டென்றும், அவர் வடநூலாரின் கருத்தையே கையாண்டுள்ளார் என்றும், சிலம்பு, மேகலை இவற்றின் காலம் கி. பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகள் என்றும் சேரன் செங்குட்டுவனுக்கு இளங்கோ என்ற தம்பியே கிடையாது என்றும் பலவாறு கூறுவாராயினும் நாமிவற்றையெல்லாம் விட்டு வள்ளுவர் கி பி. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்

தில்தான் குறளினை யாத்தார் என்னும் அவரின் கூற்றுப் பொருந்துகிறதா என்ற ஒன்றினை மட்டும் ஆய்வோம்.

குறளின் காலம் கி. பி 6–ஆம் நூற்றாண்டே எனக் கூறவந்தவர் "சிலப்பு, மேகலை இவற்றின் காலம் கி. பி. 7, 8–ஆம் நூற்றாண்டுகளே" என்கிறார் (தமிழ்ச் சுடர்மணிகள்–பக். 47.)

இக்கருத்தை எந்த ஆய்வாளரும் ஒப்பினாரிலர். இக்கருத்தினை மறுத்துரைக்கவந்த திரு. தங்கவேலன் என்பார் கூறுவதாவது: கி.பி 3–ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 8–ஆம் நூற்றாண்டுவரை பல்லவராட்சி நடைபெற்றுள்ளது. கழகக்கால நூல்களான சிலம்பும், மேகலையும், எட்டுத்தொகையும்–பத்துப்பாட்டும் காஞ்சிபுரத்தைப் பற்றிக் கூறி இருப்பினும்–இப் பல்லவரைப் பற்றிய ஒரு குறிப்பும் சொல்லவில்லை. மேலும் களப்பிரர்கள் தென்னாட்டில் கி. பி 300 முதல் கி. பி. 550 வரை ஆண்டனர் என்பார் நீலகண்ட சாத்திரி. எனவே காஞ்சியைப் பற்றிக் கூறும் நூல்கள் பல்லவரைப் பற்றிக் கூறாமையினாலும் களப்பிரர் பற்றிக் கூறாமையினாலும்–மேற்சொன்ன நூல்கள் இவ்விருவருக்கும் முற்பட்டவையாகவே இருக்கும். (தமிழ்மறைக் கட்டுரைகள் –பக். 13, 14)

மேலும் இதற்குச் சான்றாக பர். இராசமாணிக்கனார் அவர்கள் கூறுவதாவது:—கழக நூல்களில் பல்லவரைப் பற்றிய குறிப்பே காணல் இயலாது. ஆனால் கழக நூல்களின் காலமாகிய கி. பி. 2–ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலங்களில் பல்லவர் குறிக்கப்பட்டுள்ளனர். (பல்லவர் வரலாறு–பக். 15.)

அடுத்துப் பேராசிரியர் கூறுவதாவது: "வள்ளுவராலே கடைக் கழகம் அழிவுற்றது என்று செவிவழி வரலாறு கூறும். ஆதலால் கடைக் கழகத்தில் நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்திற்கும் இவர் பிற்பட்டவர் என்பது தெளிவு." (த. சு. மணிகள்)

வள்ளுவர் கடைக் கழகக் காலத்தின் இறுதியில் வாழ்ந்தவரல்லர். இங்ஙனமிருக்க வையாபுரியார் கூற்று உண்மையாவதெப்படி? செப்பேடுகளையும்–கல்வெட்டுகளையும் துணைக்கழைக்காமல் ஏதோ ஒரு செய்தியைக்காட்டி வள்ளுவரைக் கடைக்கழகக் காலத்திற்குப் பிற்பட்டவர் என்று காட்டுவதிலேயே மிக்க கவனம் கொள்கிறார் அவர் வள்ளுவராலே கடைக்கழகம் அழிவுற்றதற்குத் திருவள்ளுவ மாலையில்

யாதேனும் செய்தி உண்டா எனில் இல்லை என்கிறார், மறைந்த நாவலர் சோமசுந்தர பாரதியார். ''வள்ளுவர் கடைக்கழகத்தின் கடைக்காலத்தில் கழகத்தை விறழ்த்த கதைசுட்டும் குறிப்பு ஒன்றேனும் இல்லை.'' (திருவள்ளுவர்–பக். 20)

இனி மிக வியப்பான ஒன்றைக் கூறுகிறார் வையாபுரியார். ''வள்ளுவர் வடமொழிச் சொற்களேயன்றி வடமொழிக் கருத்துகளையும் எடுத்தாண்டுள்ளார். எனவே அவர் வடநூலாருக்குப் பிறபட்டே குறளினை இயற்றி இருத்தல் வேண்டும்.'' (த. சு. மணிகள் பக்–72) மேலும் கூறுகிறார் ''காமசூத்திரத்தின் காலம் கி பி 400. எனவே வள்ளுவரும் அக்காலத்திற்குப் பிறபட்டுத்தான் குறளினை இயற்றி இருக்க வேண்டும். (த. சு. மணிகள்–பக். 76, 77).

இங்கு வடநூலாரெனத் திரு. வையாபுரியார் குறிப்பிடுவது சாணக்கியரையும் காமசூத்திரம் எழுதிய வாத்யாயனரையுமேயாம். இதுபற்றிச் சோமசுந்தர பாரதியார் கூறுவதாவது:—''வேதங்கட்கு மிகப்பிந்திய மனுமுதலான வடமொழிநூல் ஒன்றுமே குறளுக்கு முதல் நூல் ஆகாது என்னும் குறிப்பும் திருவள்ளுவமாலைச் செய்யுளிற் காணலாம். இவ்வாறு மனுமுதலான வடமொழி நூலுடையாரே வள்ளுவருக்கு முதல் நூலுடையார் ஆகாதபோது அவரைப் பின்பற்றிய மிகப் பிறபட்ட நீதிநூலுடைய சாணக்கியர் முதலோர் வள்ளுவருக்குவழிகாட்டிகள் ஆவது எப்படியோ? திருக்குறள் அறநூலாகவே, அறத்தின் ஒரு பகுதியான நீதிகளைமட்டும் கூறும் வடமொழி நூல்களின் வழிநூலாக வள்ளுவர் குறளினை இயற்றினார் என்பது பொருந்தாத கூற்றேயாம்'' (திருவள்ளுவர்–பக். 34).

எனவே, ஏன் வள்ளுவரைப் பின்பற்றியோ அல்லது தமிழிலுள்ள கருத்துகளைப் பின்பற்றியோ சாணக்கியர் நூலெழுதி இருக்கக் கூடாது என்ற எண்ணம் நமக்கு உண்டாகிறதன்றோ?

ஆம்! முற்றிலும் உண்மையே என்கிறார் திரு. நா. சி. கந்தையா அவர்கள்: ''சாணக்கியர் செய்துள்ள நூலுக்கு அடிப்படை தமிழிலேயே இருந்திருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை. வள்ளுவர் சாணக்கியர் நூலிலிருந்து சிலவற்றினை எடுத்து மொழிபெயர்த்துக் கொண்டார் என்று கூறுதல் இயைபுடையதாகாது'' (தமிழகம்–பக். 225)

ஆக, இதுகாறும் கண்டவற்றால் பேராசிரியர் வையாபுரி அவர்களின் வள்ளுவர் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறளினை இயற்றினார் என்ற கருத்து வலிவற்றது, தீதானது. என்று கண்டோம். இனி செந்நாப் போதாரின் உண்மைக்காலம் எது என்பதில் தமிழறிஞர்களின் முடிவுகளைக் காணலாம்.

I. "வேறு தக்க சான்றுகள் கிடைக்கும்வரை திருவள்ளுவர் காலம் ஏறத்தாழக் கி. மு. 1 முதல் கி. மு. 300க்கு உட்பட்டது எனக் கோடலே அமைவுடைத்தாம்." (டாக்டர். மா. இராசமாணிக்கனார்-திருவள்ளுவர் காலம் யாது? பக்-36).

II. திருவள்ளுவர் காலம் கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உட்பட்டதாகலாம். (Studies in Tamil Literature and History pp. 153-150 V. R. Ramachandra Dikshitar).

III. கி. மு முதல் நூற்றாண்டே வள்ளுவர் காலம். (மறைமலையடிகள்).

IV. வள்ளுவர் கி. மு. 76க்கும் கி. மு. 36க்கும் இடைப்பட்டவர். (துடிசைக்கிழார். சிதம்பரனார்)

ஆக, எவ்வாறு இருப்பினும் தீதுபயக்கும் வையாபுரியாரின் ஆய்வுரைகள்-தமிழுலகில் கொள்ளத்தக்கவையல்ல. அவரால் தொகுக்கப்பட்டவைபோக அவர் ஆய்ந்து வெளியிட்டவை அனைத்தும் இன்று அறிஞர்களின் ஆய்வில் உள்ளன. "இவ்வளவு பெரிய உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு இப்படிப்பட்ட கருத்துகளைக்கூற வையாபுரியார் எப்படித் துணிந்தார்" என்று மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் வியந்துள்ளார்கள்.

கால ஆராய்ச்சி இன்றைய உலகிற்கு இன்றியமையாதது. இதனை உணர்ந்து தேனுறை தீந்தமிழின் திருநிலத்தே தமிழ் செழித்திட வகை செய்வோம். தெருவெங்கும் தமிழ் முழங்கிய பொன்னார் தமிழகத்தின் புகழ்வளர்ப்போம். O

தமிழர்க்குத் தனியாண்டு.

தரங்கை-பன்னீர்ச்செல்வன்.

தோற்றுவாய்: "தமிழர் நெறி தனி நெறி—பிற மாந்த மொழியின் மேலாண்மைக் குட்படாத செந்நெறி" என்பது உலக மொழியாய்வர் பலர் அறுதியிட்ட கருத்து. ஆயினும் கழகப் பொற்காலத்திற்கு முன்பிருந்தே தமிழகம் போந்த மாற்றின (ஆரிய) மாந்தர் தம் விரகார்ந்த மொழிப்பற்றால் தமிழ்மொழியின் தனித்தன்மையும், தமிழினத்தின் செம்மாந்த நாகரிகமும் பண்பாடும் சிதைவுற்றன. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகமாதலின், வேந்தராயினோர் வேற்றின மாயையுள் வீழ்ந்து பட்டதும் அவராட்சிக்குட்பட்ட அன்றைய மக்களும் தனித்தன்மையில் ஆர்வம் தளர்ந்தனர். ஆனால், தமிழின மறுமலர்ச்சி ஊழியாகிய இவ்விருபதாம் நூற்றாண்டில் தோன்றிய நம் அன்னை மொழி அறிஞர்தம் அயர்வுறு முயற்சியால், கலப்புத்தமிழ் நெறியும், பிழைப்புத்தமிழ் நெறியும் கலக்கம் உற்றன; துலக்கம் பெற்றன. இஞ்ஞான்று ஓரளவு படிப்பறிவுள்ள ஒவ்வொரு (ஒரு சில வயிற்றுத்தீனி விலங்குகளைத் தவிர) தமிழ்மகனும், சீரழிக்கப்பட்டு விட்ட தன்னின மரபுகளைச் சீரமைத்துச் சிறப்பெய்த விழைகின்றான்.

தமிழாண்டு: தமிழர்க்கெனத் தனியாண்டில்லாப் பெருங் குறையை—தமிழர் மாண்புக்கு மாசூட்டிய அறுபது வடசொற்களின் தொகுப்பைக் களைந்து, தமிழன் பெருமையைப் புடவியெங்கும் பரப்பிடும் புகழ் செறிந்த ஒரே ஒப்பறு நூலாம் திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவரின் பெயரில், தொடர் ஆண்டு முறையை ஆய்ந்து நிறுவிய அறிஞர் பெருமக்களுக்குத் தமிழகம் என்றும் தலைவணங்கக் கடமைப்பட்டுள்ளது.

எனினும் தமிழர் நற்புகழினை மீட்டு நிறுத்தும் தமிழாண்டாகிய திருவள்ளுவராண்டினை, தமிழர் எனக் கூறிக்கொள்ளும் நீர்மையவர் அனைவரும் தவறுமல் பின்பற்ற வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்தாரல்லர். பொதுவாக, அழைப்பிதழ்கள் அச்சிடுங்கால் ஒரு சிலர் தி பி. ஆண்டுமுறையைப் பொறிப்பதையும், ஒரு சில தாளிகைகள் மட்டும் பயன்படுத்துவதையும் தவிர, ஆண்டு பல கழிந்த பின்னும் நிறைநிலையைக் காணுமாறில்லை. இஃது ஓரளவே குறையெனினும், திருவள்ளுவராண்டினைத் தமிழ்ப் பேருலகெங்கணும் பரப்ப தமிழ்ப்பற்றுளர் இறுகாறும் இயற்றிய முயற்சிகளை எடைபோடின், இச்சிறு நிலையே மிகப்பெரிய வெற்றியெனில் பிழையன்று.

அறிஞர் ஆய்ந்து வகுத்துள்ளவாறு கி. மு. மூப்பத்தோராண்டு கட்கு முற்படக் கொள்ளப்படும் திருவள்ளுவர் தொடராண்டின் இரண்டாயிரம் நிறைவு இக்கால் நடைபெறுகின்றது. இக்கால் பெருவிழா வெடுத்துத் தமிழக மெங்குமுள்ள எத்துறைத் தமிழரும் திருவள்ளுவர் ஆண்டினை மேற்கொள்ள அறிஞர் குழாம் ஆவன ஆற்றல் வேண்டும். இம்மாபெரும் தொண்டிற்கு, முதன் முறையாகத் தமிழில் உறுதி மொழி ஏற்று, தமிழக வரலாற்றில் தனிச் சிறப்புமிக்க பணிபல தமிழுக்கு ஆற்ற முன்வந்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் தி. மு கழக ஆட்சியினர் முழு ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும்.

திங்கள்பெயர்: திருவள்ளுவர் ஆண்டு முறையை வகுத்த அறிவார்ந்த பெருமக்கள் சித்திரை முதனாளில் ஆண்டினைத் தொடங்கும் வழக்கினுக்குப் பகரமாக தை முதனாளில் தொடங்கியதைத் தவிர வேறெவ்வகை மாற்றமும் செய்திலர். மொழிப் பேரறிஞர். ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் பண்டைத்தமிழ் நெறிப்படி பன்னிரு ஓரைகளின் அடிப்படையில் தூய தமிழ்ச் சொற்களைத் திங்கட்களின் பெயர்களாய்க் கண்டு வழங்கினர். இச் சிறப்புறு முயற்சியை ஒரே தனித்தமிழ்த் தாளிகையாகிய 'தென்மொழி'யும் பிறவொன்றிரண்டும் பின்பற்றி வருவது பாராட்டற்குரியது. பன்னிரு ஓரைகளின் தனித் தமிழ்ப் பெயராகிய சுறவம் (தை), கும்பம் (மாசி), மீனம்(பங்குனி), மேழம் (சித்திரை), விடை (வைகாசி), இரட்டை (ஆனி), கடகம் (ஆடி), மடங்கல் (ஆவணி), கன்னி (புரட்டாசி), துலாம் (ஐப்பசி), நளி (கார்த்திகை), சிலை (மார்கழி), ஆகியவற்றினை இப்பொழுதுள்ள வடமொழித் தமிழ் மாதங்களின் பெயர்வரிசைக்கு மாற்றாக ஏற்றுக்கொள்வதே மிகச் சிறப்பாகும். எனவே, தமிழர் அனைவரையும் இத்திங்கட் பெயர்த் தொகுப்பினையே ஏற்றுப் பயன்படுத்த வேண்டுகின்றேன்.

திங்கட்குரிய நாட்பங்கீடு: இனியும் ஐந்துறுப்புக் (பஞ்சாங்கம்) கணிப்போரின் கைச்சரக்கையே திருவள்ளுவராண்டு மாதங்களின் நாட்பங்கீட்டுக்கும் பின்பற்ற வேண்டியதில்லை. ஏனெனில், அம்முறையானது, பொதுமக்கள் தாமே அவ்வஞ்ஞான்று (அரிதில் முயன்றும்) வகுத்தறிய முடியாத கமுக்கமும், சிக்கலும் மிக்கது. இதனை உடனடியாக மாற்றியமைக்க வேண்டியது திருவள்ளுவராண்டுப் பரவலுக்கு மிக இன்றியமையாதது.

தஞ்சைப் புலவர் பாலசுப்பிரமணியம் அவர்கள் (தென்மொழி சுவடி: ௨ ஓலை:-௪) பன்னிரண்டு மாதங்களுக்கும் முறையே ௩௦, ௩௧, ௩௧, ௩௧, ௩௧, ௩௧, ௩௦, ௩௦. ௩௦. ௩௦, ௩௦, ௩௦ எனப் பங்கிட்டு நான்காண்டுகட்கு ஒருமுறை முதல் திங்களில் ஒரு நாளைக் கூட்டிக் கொள்ளல் வேண்டுமெனக் கூறியுள்ளார். இஃது ஏற்கத்தகுந்தது. ஏனெனில் ஆங்கிலர் முறையைப் போன்றும், இந்திய அரசினர் அண்மையில் வழங்கத் தொடங்கியுள்ள 'சக' ஆண்டுமுறையைப் போன்றும் மிக எளியது ஓரளவே கணிப்பறிவுள்ள பொதுமக்களும் தாமாகவே கணக்கிட்டுக் கொள்ளும் பெற்றியது.

இறுவாய்: தன்னேரில்லாத் தமிழைத் தாய்மொழியாகப் பெற்றுள்ள தமிழர் அனைவர்க்குமுரிய திருவள்ளுவராண்டை, மாதங்களைத் தவறாது—ஒரே அமைப்போடு பின்பற்ற வேண்டியதுமிக இன்றியமையாதது.

அவை வருமாறு:

௧. சுறவம்—௩௦ (நாட்கள்)
௨. கும்பம்—௩௧ (,,)
௩. மீனம்—௩௧ (,,)
௪. மேழம்—௩௧ (,,)
௫. விடை—௩௧ (,,)
௬. இரட்டை-௩௧ (,,)
௭. கடகம்—௩௦ (,,)
௮. மடங்கல்-௩௦ (,,)
௯. கன்னி—௩௦ (,,)
௧௦. துலாம்-௩௦ (,,)
௧௧. நளி —௩௦ (,,)
௧௨. சிலை —௩௦ (,,)

தனித்தமிழாண்டு பற்றித் தனிப்பட்ட என்போன்றோர் கருத்து முடிவானதன்றாதலின் தமிழ்ப் பேரறிஞர்கள் ஒருங்கு திரண்டு ஆழ்ந்தகன்றாய்ந்து தி. பி. 2000-ஆண்டிலாயினும் ஒரு முடிவுகாணல் வேண்டும். நாட்குறிப்பு, நாளட்டவணை போன்றவற்றை ஒரே கோட்பாட்டுடன் வெளியிட ஏற்பாடு செய்தல் வேண்டும். எப்படியோ பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பண்பட்ட தமிழகம் இன்று தனக்கெனத் தனியாண்டு முறைகூட கைக்கொள்ள ஏலாத, மொழித் தன்னிறைவற்றதாய் இழிந்துவிட்டது எனப் பிறர் எண்ண இடந்தரல் வேண்டா. தழைக்க தனித்தமிழுணர்வு! O

○ உங்கள் அறிவைப் பொய்யானதென்றோ போலியானதென்றோ எவரும் கருதவில்லை. பொய்யாகக் கருதப்படுவது உங்கள் அன்பே. தாங்கள் தங்களிடத்தே இருப்பதாகக் கூறும் அன்புணர்வில் யாருக்கும் நம்பிக்கையில்லை. நீங்கள் உங்கள் அன்பின் அடையாளங்களாகக் காட்டிய புறச்செயல்கள் எல்லாம் அவ்வப்போழ்து உண்மையாகவே மகிழ்வூட்டிய போதிலும் உங்களின் கரவான வேறுபல வினைகளையும் போக்குகளையும் நோக்கும் பொழுது அவை பொருளற்றுப் போகின்றன. நீங்கள் காட்டிய அன்பு பொய்யானது; போலியானது; பொருளற்றது என்ற உணர்வே மேலோங்குகின்றது...உள்ளொன்றும் புறமொன்றுமாகத் தாங்கள் இயங்கியிருக்கின்றீர்கள், இயங்குகின்றீர்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உள...நான் உங்களைப் 'பகை' யாகவே கருதிவிட்டதாக நீங்கள் நினைத்திருப்பதும், பரப்பி வருவதும் எள்ளத்தக்கதாகும்....உங்கட்கு யாதானும் மனநோய் இருக்குமென்று நான் ஐயுறுகின்றேன்...பொதுத்தொண்டு என்பது தென்மொழியின் தனிச் சொத்து அன்று. பொதுத்தொண்டுக்கென்று பெருஞ்சித்திரனார் வகுத்தளிக்கும் வழி ஒன்றுதான் உள்ளது என்பதும் பொருந்தாது. பொதுத்தொண்டுக்கென்று பெருஞ்சித்திரனார் மேற்கொண்டுள்ள வழி அவருக்குச் சரியானதாக இருக்கலாம். ஆனால் எல்லாருக்கும் அது சரியானதாக இருக்க முடியாது. தென்மொழி பெருஞ்சித்திரனாரின் விருப்பு வெறுப்புகட்கும், வாகு, ஏந்து கட்கும் ஏற்ப நடத்தப்படும் ஒரு தாளிகையே! பெருஞ்சித்திரனாரும் தனிமாந்த விருப்பு வெறுப்புகட்கும் உணர்வு ஏற்றத்தாழ்வுகட்கும் தன்முனைப்பு எண்ணங்கட்கும் ஆளாகும் ஒரு தனி மாந்தரே!... (முழு மடலும் பின்னர் வெளியிடப்பெறும்)

—ம. இலெ. தங்கப்பா, புதுவை—1. (26-12-68)

○ தங்கள் 'இயக்கம்' பற்றி நான் மாறுபட்ட கருத்துடையவன்; ஆனாலும் தாங்கள் எழுதிய 'என் கொள்கை பற்றிய சில விளக்கங்கள்' என்ற கட்டுரைத்தொடர் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. அதில் உங்கள் அகநிலை உணர்வுகளை எடுத்துக் காட்டியிருந்தது மிகநன்று. மேலும் அந்தக் கட்டுரையில் இருந்த மெய்யுணர்வுப் பிழம்புகள் என் ஊனை உருக்கின; உள்ளொளி பெருக்கின. வங்கப் பெருமகன் தாகூரின் மெய்யறிவை அந்தக் கட்டுரைத்தொடரில் கண்டேன். கழிபேருவகை கொண்டேன்.

—இரா. இரகுபதி, மேலைச்சிவபுரி. (12-12-68)

○ தென்மொழியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தங்களைப் பற்றித் தவறான தகவல்களைக் கொடுப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால் வெளியேறியும் உங்களைப் பற்றி உயர்வாகவே பேசும் தோழர்களையும் நீங்கள் பெற்றிருந்தீர்களென எண்ணுகிறேன். மே—திங்களில் உங்களுடன் மிகமிக ஒன்றியிருந்த ம. இலெனின் தங்கப்பா அவர்களை நான ஊரில் கண்டு, உங்களைப்பற்றி முரட்டுத்தனமான வினாக்களைக் கேட்டேன். அவர் "பெருஞ்சித்திரன் தூய்மையான உள்ளத்தவர்; தூங்காது செயலாற்றும் துணிவுள்ளம படைத்தவர்; தம்மையும் தம் மனைவி மக்கள் யாவரையும் தென்மொழியின் வளர்ச்சியில் ஈடுபடுத்தியவர்; அவரிடம் குறைகாண விழைவது நமது பிழையே ஆகும். நீயும் அவரைப்பற்றிப் போகப் போகப் புரிந்து கொள்ளுவாய்; விடாப்பிடியான குணமுடையவர். இந்தக் குணம் இல்லாவிட்டால் பலர் அவரை ஏமாற்றியிருப்பார்கள்" என்று விரிவாகக் கூறினர். தவறான

(தொடர்ச்சி பின்பக்கம்)